382

THE "VAKIL"—TAMIL LAW MAGAZINE—FOR THE CITIZEN

"வக்கீல்"

382
2.52

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 MAY 1952
MADRAS

தேர்தல் மலர்

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன் விளக்கும்
தமிழ் சட்டப் பத்திரிகை

THE "VAKIL" டிசம்பர்-1951 6 அணா

தமிழ் நாட்டில் தேர்தல் நடக்கும் தேதிகள்

தேர்தல் நடக்கும் தேதி	டில்லி பார்லிமெண்ட் தொகுதிகள்.	சென்னை அசெம்பிளி தொகுதிகள்
2-1-1952	வேலூர். (2)	குடியாத்தம் (2); திருப்பத்தூர்; வாணியம்பாடி; வேலூர் (2); ராணிப்பேட்டை; திருவண்ணாமலை (2); செங்கம்.
	கடலூர் (2)	தலவாசல்; கள்ளக்குறிச்சி (2); விருத்தாசலம் (2); கடலூர் (2); புவனகிரி; சிதம்பரம் (2).
	மதுரை. (2)	வடமதுரை; மேலூர் (2); மதுரை வடக்கு; மதுரை தெற்கு; நிலக்கோட்டை (2); திருமங்கலம்; மானாமதுரை; சிவகங்கை.
5-1-1952	வந்தவாசி.	வந்தவாசி (2); களசப்பாக்கம்; போளூர்; ஆரணி.
	திண்டிவனம் (2)	மேல்மலையனூர்; செஞ்சி; திண்டிவனம் (2); விக்கிரவாண்டி; விழுப்புரம்; திருக்கோயிலூர் (2); உளுந்தூர்பேட்டை; பண்ருட்டி.
	ஸ்ரீவில்லிபுத்தூர்.	ஸ்ரீவில்லிபுத்தூர் (2); எதிர்கோட்டை; சாத்தூர்; விருதுநகர்.
8-1-1952	செங்கல்பட்டு.	திருப்போரூர்; செங்கல்பட்டு; மதுராந்தகம் (2); உத்தரமேரூர்.
	காஞ்சீபுரம்.	அரக்கோணம்; ஷோலிங்கர்; ஆற்காடு; செய்யாறு; காஞ்சீபுரம்.
	கிருஷ்ணகிரி.	ஹரூர் (2); கிருஷ்ணகிரி; உத்தனப்பள்ளி; ஹோசூர்.
	கோயமுத்தூர்.	மேட்டுப்பாளையம்; தொண்டாமுத்தூர்; கோயமுத்தூர்; நீலகிரி (2).
	அருப்புக் கோட்டை.	அருப்புக்கோட்டை; முதுகுளத்தூர் (2); கோவில்பட்டி; கடம்பூர்.
	ராமநாதபுரம்.	பரமக்குடி; திருப்பத்தூர்; காரைக்குடி; திருவாடானை; ராமநாதபுரம்.
9-1-1952	மாயூரம் (2)	மாயூரம் (2); சீர்காழி; நன்னிலம் (2); மன்னார்குடி (2); நீடாமங்கலம்; நாகபட்டினம் (2).
11-1-1952	திருவள்ளூர் (2)	பொன்னேரி (2); திருவள்ளூர் (2); சைதாப்பேட்டை (2); ஸ்ரீபெரும்புதூர்; வண்ணாரப்பேட்டை; ரூனி; பெரம்பூர்.
	தர்மபுரி.	இடைப்பாடி; ஓமலூர்; மேச்சேரி; தர்மபுரி; பெண்ணாகரம்.
12-1-1952	பொள்ளாச்சி.	மதுக்கரை; பொள்ளாச்சி (2); கோவில்பாளையம்; உடுமலைப்பேட்டை.
	தஞ்சாவூர்.	அரந்தாங்கி; அதிராம்பட்டினம்; பட்டுக்கோட்டை; தஞ்சாவூர் (2).
	ஸ்ரீவைகுண்டம்.	தூத்துக்குடி; திருச்செந்தூர் (2); சாத்தாங்குளம்; விளாத்திகுளம்.
	திண்டுக்கல்.	பழனி; ஒட்டன்சத்திரம்; ஆத்தூர்; திண்டுக்கல்; வேடசந்தூர்.
16-1-1952	மதராஸ்.	ஹார்பர்; ஆயிரம்விளக்கு (2); திருவல்லிக்கேணி; மயிலாப்பூர்.
	சேலம்.	ராசிபுரம்; ஆத்தூர்; சேலம் டவுன்; சேலம் ரூரல்; வேலப்பாடி.
	திருப்பூர்.	கொள்ளேகாலம்; நம்பியூர் (2); திருப்பூர் (2).
	புதுக்கோட்டை.	புதுக்கோட்டை; திருமயம் (2); மணப்பாறை; திருச்சிராப்பள்ளி தெற்கு.
	கும்பகோணம்.	பாபநாசம்; சாலியமங்கலம்; கும்பகோணம்; ஆடுதுறை; அரியலூர்.
	திருநெல்வேலி.	பழவூர்; நாங்குனேரி; சேர்மாதேவி; திருநெல்வேலி (2).
	பெரியகுளம்.	பெரியகுளம் (2); உத்தமபாளையம்; கம்பம்; சேடப்பட்டி.
21-1-1952	திருச்செங்கோடு.	நாமக்கல் (2); பரமத்தி; திருச்செங்கோடு (2).
	திருச்சிராப்பள்ளி.	திருச்சிராப்பள்ளி வடக்கு; ஸ்ரீரங்கம்; முசிறி; மணச்சநல்லூர்; லால்குடி.
	சங்கரநயினார் கோவில்.	அம்பாசமுத்திரம்; ஆலங்குளம்; தென்காசி; சங்கரநயினார் கோவில் (2).
25-1-1952	ஈரோடு (2)	பவானி; கோபிசெட்டிபாளையம்; தாராபுரம்; காங்கயம்; கொடுமுடி; ஈரோடு; ஊத்துக்குழி; அரவக்குறிச்சி; கரூர் (2).
	பெரம்பலூர்	துறையூர்; பெரம்பலூர் (2). ஜெயங்கொண்டம் (2).

வக்கீல்

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 டிசம்பர் 1951 இதழ் 12

OFFICE OF THE REGISTRAR ... 5 MAY 1952 ... MADRAS

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B. A., B. L.
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, C. R. வீரராகவன், B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L., (ஆசிரியர்)

1952 ஜனவரி முதல் "வக்கீல்" சந்தா விபரம்.

புதிய சந்தா விபரம்:— தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5. விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— 1952 ஜனவரி முதல் "வக்கீல்" அதிகப் பக்கங்களுடனும், இன்னும் பல முக்கியமான பகுதிகளுடனும், வெளிவரும். அதன் பொருட்டு "வக்கீல்" சந்தா மேலே கண்டபடி திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. 1952 ஜனவரி இதழ் முதல் புதிய சந்தா விகிதப்படி கணக்கு செய்து "வக்கீல்" இதழ்கள் அனுப்பப்படும். 1951 டிசம்பர் மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேருபவர்களும் புதிய சந்தா விகிதப்படிக்குள்ள சந்தா தான் அனுப்பவேண்டும். வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசரமாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப்பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர்களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 : : கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும்-செய்திகளும்	
தமிழ் மக்களின் பொறுப்பு	3
சரித்திரத்தில் இது ஒரு பெரிய சம்பவம்	3
பிரதம நீதிபதி கனியா அவர்களின் மறைவு	4
"வக்கீல்" புதிய தோற்றம்	4
புதிய சட்டங்கள்	5
இந்தியக் குடியரசு அமைப்பும் பொதுத் தேர்தலும்	8
வாக்காளர்களும் – தேர்தலும்	15
தேர்தல் சின்னங்கள்	28
வழக்கும்—தீர்ப்பும்	
* தேர்தலில் ஒருவருக்குப் பதிலாக வேறு ஒருவரைத் தமக்கு "வோட்" போடும்படி ஆள் மாராட்டம் செய்யத் தூண்டிய சட்டசபை மெம்பர்	29
* 'பக்கிரிமுகமதின்' மகன் முகமதுதீனுக்குப் பதிலாக 'அப்துல்லாவின் மகன் முகமதுதீன் 'வோட்' செய்தார். மாட்டிக் கொண்டு தண்டனை அடைந்தார்	30
கேள்வி - பதில்	
தேர்தல் சம்பந்தமானவை	31

"வக்கீல்" பத்திரிகைக்கு சென்னை பிரத்தியேக ஏஜண்டு
மதராஸ் நியூஸ் ஏஜன்சி.
13 நரசிங்கபுரம் தெரு, மவுண்டுரோடு, மதராஸ்.

187214

PATENT REGISTERED NO. 27878.

ரோலிங் ஸ்டோன்.

தண்ணீரில் ஊரவைத்த தானியங்களைக் கைபடாமல்
மாவாக அரைக்கும் எலெக்டிரிக் கல் உரல்.

ஒரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங்
சிறந்த சிற்றுண்டி உயர்ந்த உணவு திருப்தியான கவனிப்பு
தங்குவதற்கு வசதியான அறைகளுடன் உள்ளது.

புரொப்ரைட்டர்ஸ்:
A. V. சக்கிரவர்த்தி அய்யங்கார் (A.R.V. Son.)
ஒரிஜினல் ஸ்ரீ ராமவிலாஸ் போர்டிங் & லாட்ஜிங் &
ரோலிங்ஸ்டோன் தயாரிப்பாளர்கள்.
மாயவரம் ஜங்ஷன்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது!

அன்னகிளி
சோப்

தயாரிப்பவர்:-
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 38
தஞ்சாவூர்.

குறைந்த விலை! நிறைந்த சுகம்!!
எல்லா வாய்வுகளையும் கண்டிப்பது
மிஸ்க்காய லேகியம்
டிரேட் மார்க்கு ரிஜிஸ்டர் No. 222.
T. K. S. பவான்சங்கர் Co.,
27, தாடாளங்கோவில்,
சீர்காழி.

எங்கும் புகழ்பெற்ற அற்புத சஞ்சீவி
"ஜெயராம்" காயசுத்தி லேகியம் [Regd.]

TRADE MARK.

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினம் உபயோகிக்கப்படுவது.
தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப்பிடரிவலி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, இடுப்புவலி, கை கால்வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டி, சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.
- உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.
1 சேர் ரூ. 4—8—0 ½ சேர் ரூ. 2—4—0.
வி. பி. பி. செலவு தனி.
உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்.
தயாரிக்குமிடம்:—
ஜெயராம் வைத்தியசாலை
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 3 டிசம்பர் 1951 இதழ் 12

குறிப்புகளும் - செய்திகளும்

தமிழ் மக்களின் பொறுப்பு:—இன்னும் சில தினங்களில் தமிழ் மக்கள் தங்களுடைய பெரியதோர் கடமையைச் செய்து முடிப்பார்கள். செவ்வனே செய்து முடிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை; அகில இந்தியாவிலும் ஆட்சி புரியத் தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு. அவ்விதம் ஆட்சி செய்யத் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை அடுத்த மாதம் பொறுக்கி அனுப்புவார்கள். இவ்விதம் அனுப்பும் நமது பிரதிநிதிகள், இமயமலை முதல் குமரிமுனை வரையிலுள்ள பரந்த இப்பரதகண்டத்தில் வசிக்கும் முப்பத்து ஏழுகோடி மக்களுக்கும் சட்டம் செய்வதிலும் அவர்கள் அரசாங்கத்தை நடத்துவதிலும் உரிய பங்கெடுத்துக் கொள்வார்கள். அதைத் தவிர தமிழ் நாட்டையும் ஆந்திர தேசத்தையும், மலையாளத்தையும் கொண்ட சென்னை ராஜ்யவாசிகளுக்குரிய சட்டங்கள் செய்யவும் அவர்களுடைய சர்க்காரை நடத்தவும் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுப்பார்கள். இத்தேர்தல் நடந்த அடியுடன், ஆந்திரர்களும், கேரளர்களும் நம்மை விட்டுப் பிரிந்து போகலாம். அப்பொழுது தமிழ் நாடு ஒரு தனி ராஜ்யமாகும். தமிழ்ஜில்லாக்களில் இப்பொழுது நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மட்டில் அடங்கிய சட்டசபையே தமிழ் நாட்டுக்கென்று அமைக்கப்படலாம். சரித்திர காலத்தில் தமிழ்நாடு அடைந்திருந்த மகோன்னத நிலைமைக்கு இந் நாட்டைத் திருப்ப வல்லமையும், ஊக்கமும், நேர்மையும் உள்ளவர்களையே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பது தமிழ் மக்களின் கடமையும் பொறுப்புமாகும்.

சரித்திரத்தில் இது ஒரு பெரிய சம்பவம்.

இப்பொதுத் தேர்தலில் வாக்காளர்களாகிய நம்முடைய வேலை மிகச் சுலபமானதுதான். ஆனால் இதை நடத்தும் சர்க்காரின் பொறுப்பு மிகப் பெரிது. 21 வயது பூர்த்தியானவர்கள் இந்தியாவில் சுமார் $17\frac{1}{2}$ கோடி இருக்கின்றனர்! இவர்கள் தான் "வோட்" கொடுத்து, பிரதிநிதிகளைப் பொறுக்க வேண்டும். இவர்கள் பெயர்களை எல்லாம் கண்டுபிடித்து, தகப்பன் பெயர், விலாசம் முதலிய விவரங்களுடன் அந்தந்தத் தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவைத் தயார் செய்து அச்சடிப்பது சுலபமான வேலையா? இந்த ஜாப்தா ஒன்றை, 'பைண்டு' செய்தால் 600 அடிக்குமேல் பருமனாக இருக்குமாம்! சென்னை ராஜ்யத்தில் சுமார் $2\frac{1}{4}$ கோடி வாக்காளர்கள் இருக்கின்றனர். இவர்களுடைய பெயர்கள் அடங்கிய வாக்காளர் ஜாப்தா ஒரு 'செட், உங்களுக்கு வேண்டுமானால் ரூ. 8679 கொடுத்தால் தான் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். அல்லது உங்களுடைய பார்லிமெண்ட் தொகுதிக்கு மட்டில் வாக்காளர் ஜாப்தா வேண்டுமானால், சுமார் ரூ. 60க்கு மேல் தான் அதன் விலை இருக்கும். அல்லது சென்னைச் சட்டசபைத் தொகுதி ஏதாவது ஒன்றுக்கு மட்டில் வாக்காளர் ஜாப்தா போதுமானால் அதன் விலையும் ரூ. 12-4-0க்குக் குறையாது.

சென்னை ராஜ்யத்திலிருந்து நாம் டில்லி பார்லிமெண்டுக்கு 75 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சென்னை அசெம்

பினிக்கு நாம் 375 அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அகில இந்தியாவிலும் மொத்தம் 3779 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இப் பொதுத் தேர்தலுக்கு இரண்டு லட்சத்தி இருபத்தி நாலாயிரம் தேர்தல் சாவடிகள் இருக்கும். சுமார் இருபத்தி இரண்டு லக்ஷம் 'பாலட்' பெட்டிகள் இருக்கும். உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயகத் தேர்தல் இன்று நடக்கும் நமது இந்தியப் பொதுத் தேர்தல்.

* * *

பிரதம நீதிபதி கனியா அவர்களின் மறைவு.

1951 நவம்பர் 6-ஆம் தேதி டில்லியிலிருக்கும் நமது சுப்ரீம் கோர்ட்டின் பிரதம நீதிபதி H. J. கனியா அவர்கள் ஹிருதய நோய்வாய்ப்பட்டு மாண மடைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம். நீதிபதி கனியா தான் சுதந்தரக் குடியரசு இந்தியாவின் முதல் பிரதம நீதிபதியாக வரும் பாக்கியம் பெற்றவர். சக்தி வாய்ந்த நீதி மன்றங்கள் இல்லாவிட்டால் ஜனநாயகம் என்பது நாளடைவில் யதேச்சாதிகாரமாக மாறி விடும். மக்களின் சுதந்தரத்தைச் சர்க்காரோ, மற்ற நிர்வாக அதிகாரிகளோ பறிமுதல் செய்யாமல் காப்பாற்றும் கடமை நீதிமன்றங்களுடையதே. இக் கடமையை நமது சுப்ரீம் கோர்ட்டும் ஹைகோர்ட்டுகளும் எவ்வளவு பொறுப்புடன் செலுத்தி வருகின்றனரென்பது உலகப் பிரசித்தமானது.

ஜனநாயகத்தை ஏட்டில் வகுப்பது பெரிதல்ல. அதை நடைமுறையில் வற்புறுத்திவருவது நமது நீதி மன்றங்களே. இந்தியா ஒரு ஜனநாயகக் குடியரசானபின் மக்களின் ஜீவாதார உரிமைகள் சட்டசபைகளாலோ, சர்க்காராலோ, வேறு அதிகாரிகளாலோ பாதிக்கப்பட்ட போதெல்லாம் அவை செல்லா வென்றும் காலஞ்சென்ற நமது முதல் பிரதம நீதிபதி கனியா எவ்வளவோ பிரசித்தி பெற்ற தீர்ப்புகளில் வற்புறுத்தி யிருக்கின்றனர். அன்னாருடைய ஆத்மா சாந்தியடையுமாக!

* * *

"வக்கீல் புதிய தோற்றம்"

நேயர்கள் கையிலிருக்கும் இந்த "வக்கீல்" இதழ் ஓர் புதிய உருவம் எடுத்து கொஞ்சம் கனமாக இருப்பதை இந்நேரம் கவனித்திருக்கலாம். 1952 ஜனவரி மாதம் முதல் வெளியாகும் "வக்கீல்" இதழ்களும் இப்படியே தான் இருக்கும். சில மாதங்களாகவே பல அன்பர்களிடமிருந்து வந்துகொண்டிருந்த கடிதங்களே இப் புதிய மாறுதலுக்குத் தூண்டுகோலாயின. "சந்தாவை உயர்த்தியாவது இன்னும் இது போன்றதும் மக்களுக்கு உபயோகமுள்ளதுமான அதிக விஷயங்களை "வக்கீல்" வாயிலாக எதிர்பார்க்கிறோம்" என்றுதான் இக்கடிதங்களில் இருந்தன. சந்தாவை உயர்த்தாமலே இன்னும் அதிக விஷயங்களைச் சேர்க்கத்தான் "வக்கீல்" முயன்றது. ஆனால் பத்திரிகை அச்சடிக்கும் காகிதத்தில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியினால் அவ்விதம் செய்வது சாத்தியப்படவில்லை. பத்திரிகை அச்சடிக்கும் காகிதம் அகப்படாததோடு விலையும் மிக ஏற்றமாக இருக்கிறது. இருந்தாலும் எப்படியாவது அதிக விஷயங்களை நேயர்கள் கையில் மாதா மாதம், தாமதமின்றி, சமர்ப்பிக்க வேண்டுமென்ற குறிக்கோளை "வக்கீல்" இன்று நிறைவேற்றி இருக்கிறது. அதனால் வேறு வழி இல்லாமல் கொஞ்சம் விலையை அதிகப்படுத்தவேண்டியதாகத் தான் நேர்ந்தது. இதை நேயர்கள் பொருட்படுத்தாமல் எப்பொழுதும்போல் தங்கள் அன்பைக் காட்டி வருவார்களென்று நம்புகிறோம். 1952 ஜனவரி மாதம் முதல் "வக்கீல்" அதிக பக்கங்களுடன் இருப்பதுடன் இன்னும் பல பகுதிகள் சேர்க்கப்படும். பொது மக்களுக்கு உபயோகமுள்ள பலபல சட்ட விஷயங்கள் விளக்கப்படும். நேயர்கள் தயவு செய்து முதல் பக்கத்திலிருக்கும் புதிய சந்தா விபரங்களை கவனிக்கவும். வணக்கம்.

* * *

சென்னை சட்டசபை தேர்தல் ஜனவரி மீ 12உ நடைபெறும்.

தஞ்சை தாலூக்கா தொகுதி { திருவையார் நீங்கலாக

S. சீனிவாஸாச்சாரியார் பி. ஏ. பி. எல்.

ஹிந்துமகாசபை அபேட்சகர்

ஷை சபைக்கு 10 வருஷத்திற்கு மேல் ஜில்லா பிரஸிடெண்டாயும் மாகாண சபைக்கு வைஸ் பிரஸிடெண்டாயும் இருந்து வருகிறார். ஷை சபையின் நோக்கம்:—

பாகிஸ்தானை ரத்து செய்து மறுபடியும் இந்தியா தேசத்தை ஒன்றாக்குவது, புராதன மான ஹிந்து மதத்தைக் காப்பாற்றுகிறது, சொத்து சுதந்திரங்களை அழியப் படாமல் காப்பாற்றுகிறது, குடியாட்சியை காப்பாற்ற தேசமெங்கும் காங்கிரஸுக்கு பலமான எதிர் கட்சி எற்படுத்துவது.

சட்டஞானமும் வயது முதிர்ந்த அனுபசாலி யும் ஷை நோக்கங்களை நிறைவேற்ற ஆற்றல் படைத்தவராக இருக்கிறார்.

எல்லா ஓட்டர்களுடைய ஆதரவை எதிர் பார்க்கிறார்.

அவருடைய எலக்ஷன்சின்னம் **குதிரையும் அதின் பேரில் சவாரி செய்யும் போர் வீரனும்.**

S. சீனிவாஸாச்சாரியார்.

B. A. B. L.

பத்மா ரப்பர் ஸ்டாம்பு இங்க்பாக்டரி

50, டவுன் ஹால் ரோடு, மதுரை.

எங்களிடம் தயாராகும் கியாரண்டியுள்ள ரப்பர் ஸ்டாம்பு இங்குகளையே வாங்கி உபயோகியுங்கள்.

1 அவுன்ஸ் பாட்டில் விலை அணா 0—12—0.

½ அவுன்ஸ் பாட்டில் விலை அணா 0—6—0.

எங்கும் ஏஜண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:—

ஜெயா ஏஜன்ஸீஸ்,

61, மூர்த்தி செட்டித்தெரு, கும்பகோணம்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறை வேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப் பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக் கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

53. **தொழிலாளர்களுக்கான சர்க்கார் இன்ஷ்யூரன்ஸ் சட்டத்திருத்தம்.** (Employees' State Insurance Amendment Act 1951. (6-10-1951) 1948 ஆம் வருடத்திய தொழிலாளர்களுக்கான சர்க்கார் இன்ஷ் யூரன்ஸ் சட்டத்தில் பல முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இச்சட்ட ஷரத்து கள் பின்பு விவரமாக விளக்கப்படும்.

54. **கம்பெனிகள் தேசிய நிதி நன் கொடைச் சட்டம்.** The Companies Donations to National Funds Act 1951. (17-10-1951.) கம்பெனிச் சட்டத்தின்படி கம்பெனியின் பணங்களை எந்த எந்த விஷயங் களுக்குத்தான் செலவு செய்யவேண்டு மென்று இருந்த போதிலும், எந்தக் கம்பெனியும் ஒரு விசேஷ தீர்மானத்தின் மூலம் சில தேசிய நிதிகளுக்கு நன் கொடை அளிப்பதை இச் சட்டம் அனுமதிக்கின்றது. காந்தி தேசிய ஞாபகநிதி; சர்தார் வல்லபாய் தேசிய ஞாபக நிதி அல்லது மத்திய சர்க்காரால் அங்கீகரிக்கப் படும் வேறு தர்ம நிதிகளுக்கு இனி மேற்கண்ட விதம் எந்தக் கம்பெனியும் நன் கொடைகள் கொடுக்கலாம்.

56. **பத்திரிகை (ஆட்சேபகரவிஷய)ச் சட்டம்.** Press Objectionable Matter Act 1951 (23-10-1951.) அரசாங்கத்தைக் கவிழ்க்கவும், கொலை முதலிய குற்றங்கள் செய்யவும்; அத்தியாவசிய பண்ட சப்ளை அல்லது விநியோகத்தில் தலையிடவும், சேனை அல்லது போலீஸ் படையைத் துரோகம் செய்யவும்; பொதுமக்களுக்கு வகுப்புக்கு ரோதங்களை

வளர்க்கவும் எழுத்தாலோ படங்களாலோ தூண்டக் கூடிய விஷயங்களைப் பிரசுரம் செய்யும் பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுப்பது பற்றிய சட்டம். இச் சட்ட ஷரத்துக்கள் பின்பு விவரமாய் விளக்கப்படும்.

58. **அரசாங்க ரயில்வே செலவு அனுமதிச் சட்டம்.** Appropriation Railways No. 4 Act 1951. இந்த நிதி வருடத்தில் இன்னும் எட்டு கோடியே, அறுபத்து நான்கு லக்ஷத்து இருபத்திரண்டாயிர ரூபாய் ரயில்வேகளுக்காகச் செல்வு செய்ய மத்திய சர்க்காரை அனுமதிக்கும் சட்டம்.

60. **மத்திய அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம்.** Appropriation No. 3 Act 1951. (29-10-1951) 31-3-1952 உடன் முடியும் நிதி வருடத்தில் இந்திய அரசாங்கப் பொதுச் செலவுக்காக இந்தியப் பொதுநிதியிலிருந்து இன்னும் ரூ. 28, 75, 82,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

61. **அகில இந்தி சர்க்கார் உத்தியோகஸ்தர் சட்டம்.** All India Services Act 1951. (29-10-1951) ஐ. ஏ. எஸ்; ஐ. பி. எஸ் என்று வழங்கும் அகில இந்திய உயர்தர சர்க்கார் உத்தியோகஸ்தர்களை நியமிப்பது பற்றியும், அவர்கள் வேலை பற்றிய நிபந்தனைகளைப் பற்றியும் ராஜ்ய சர்க்கார்களைக் கலந்துகொண்டு மத்தியசர்க்காரே விதிகள் செய்யலாமென்று அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வித விதிகள் பார்லிமெண்ட் சபையில் சமர்ப்பிக்கப்படும். அவைகளைத் திருத்தவும் ரத்துச் செய்யவும் பார்லிமெண்டுக்கு அதிகாரமுண்டு.

மத்திய அவசரச் சட்டம். பாகிஸ்தான் கோர்ட் டிக்ரிகள் செல்லா:—பார்லிமெண்ட் சபை கூடாமலிருக்கும்போது 29-10-1951ல் ஜனாதிபதி அவர்களால் இந்த 1951 ஆம் வருடத்திய 6 ஆவது மத்திய அவசரச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இச் சட்டப்படி இந்திய சர்க்கார்கள் மீது பாகிஸ்தான் கோர்ட்டில் ஏற்பட்ட டிக்ரிகள் செல்லமாட்டா; ஆனால் அவ்விதம் டிக்ரி பெற்றவர்கள் மறுபடியும் ஒரு வருடத்திற்குள் இந்திய கோர்ட்டுகளில் தாவா செய்யலாம்.

பரீட்சை பாட நோட்ஸுகள்

1952-ம் வருட (1) S.S.L.C. (2) E.S.L.C. (8-ம் வகுப்பு) (3) Hindi (4) Weaving முதலிய சர்க்கார் பரீட்சைகளுக்குறிய எல்லா பாட நோட்ஸுகளும் B. A. L. T. ஆசிரியர்களால் மிகச்சிறந்த முறையிலும், எளிய நடையிலும் (இலக்கனம், பலவித மாதிரிக் கணக்குகள், வினுவிடைகள்) தனித்தனியாக தயார் செய்யப் பட்டுள்ளன. இந்த நோட்ஸுகளைப் படித்தாலே பரீட்சையில் வெற்றி பெறுவது திண்ணம்.

1. S. S. L. C. எல்லா பாட நோட்ஸுகளின் விலை ரூ. 9—0—0
2. E. S. L. C. எல்லா பாட நோட்ஸுகளின் விலை ரூ. 5—0—0
3. HINDI பிராதமிக் (பிப்ரவரி) பரீட்சை ரூ. 4—0—0
4. WEAVING லோயர்கிரேடு நோட்ஸு ரூ. 6—0—0

குறிப்பு:— நோட்ஸுகள் வேண்டுவோர் விலையின் கால் பாகம் M. O. மூலம் அனுப்பி விவரம் தெரிவித்தால் மீதி தொகைக்கு நோட்ஸுகளை V. P. மூலம் அனுப்பி வைக்கப்படும். ஸ்கூல் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் விலைக்கு 10% கழிவு உண்டு.

மானேஜர்,
ஸ்ரீ லக்ஷ்மி டுடோரியல் இன்ஸ்டிடியூட்,
புவனகிரி. P. O. S. A. Dt.

புதிய பிலிப்ஸ் ரேடியோ செட்டுகள் மலிவான விலையில் கிடைக்கும். சகல



விதமான எலக்டிரிக் சாமான்களும் கிடைக்கும்.

மாடர்ன் ரேடியோஸ்,
பெரியதெரு, :: கும்பகோணம்.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48 நாள்)
பூஜை செய்தும்
ஆயுள் பூராவும் பலன் தரும்
வெள்ளி ரக்ஷை
ரூ. 43—12—0

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். ஷை தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாகத் தேவை. மீதி ரூ. 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B:-(1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது. (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

கோட்டமருதூர்,
ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,
அரகண்டநல்லூர் PO. S. A. Dt.

ஸ்ரீ வெங்கடா லாட்ஜ்
மடத்துதெரு, கும்பகோணம்.

- அறுசுவையுள்ள சாப்பாடு
- ருசி நிறைந்த சிற்றுண்டி
- முகமலர்ந்த உபசரிப்பு!

யாவும் ஒருங்கே அமைந்தது.

உணவுப் பண்டங்கள் தயாரிப்பிற்கு
— சிறந்த இடம் —
ஸ்ரீ வெங்கடா லாட்ஜ்,
கும்பகோணம்.

தேர்தல் விஞ்ஞாபனம்

மாயூரம் தொகுதி வாக்காளர்களுக்கு

சென்னை ராஜ்ய சட்டசபைக்கு மாயூரம் தொகுதிக்கு நான் சுயேச்சை அபேட்சகனாக நிற்கிறேன்.

நேர்மையும், திறமையும் உள்ளவர்களையே காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தெரிந்தெடுக்கவேண்டும் என்ற நேருஜியின் கட்டளையைப் புறக்கணித்து மக்களின் செல்வாக்கை இழந்த பழைய மெம்பர்களையே மறுபடியும் நிறுத்தப்பட்டிருப்பதை வாக்காளர்கள் விரும்பவில்லை.

நம் மாகாணம் முழுமையும் சுயேச்சை அபேட்சகர்களுக்கே ஆதரவு அதிகரித்து வருகிறது. தேசியப் பத்திரிகைகள்கூட திறமையற்ற காங்கிரஸ் அபேட்சகர்களை விட சுயேச்சை அபேட்சகர்களையே மக்கள் ஆதரிக்கவேண்டுமென எழுதுகின்றன.

தேர்தலில் வெற்றிபெறும் எல்லா சுயேச்சை அங்கத்தினர்களும் ஒரே கட்சியாக அமைந்து பெரும்பான்மை கட்சியினர் அமைக்கும் சர்க்கார் வகுக்கும் திட்டங்களில் உள்ள குறைபாடுகளை நீக்கவும், ஏழை மக்களுடைய நலன்கள் பாதிக்கப் படாதவாறு பாதுகாக்கவும் வழிகள் வகுக்கப்படும்.

எனக்கு உங்களனைவருடைய வாக்குகளையும் அமோகமாகக் கொடுத்து ஆதரிக்க வேண்டுமாய்க் கோருகிறேன். என்னாலியன்றவரை என் கடமைகளை ஏழை மக்களின் நலன்களுக்காக உழைப்பேனென உறுதி கூறுகின்றேன்.

எஸ். பஞ்சாபகேசன்,
இன்கம்டாக்ஸ் பிராக்டிஷனர்.
'சாரதா நிலயம்' சன்னதி, மாயூரம்.

இந்தியக் குடியரசு அமைப்பும் பொதுத் தேர்தலும்

சரித்திரம்

நூற்றைம்பது ஆண்டுகளாக ஆறாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கிலேயர் 1947-ஆம் வருடத்தில் ஆட்சி துறந்தனர். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஆங்கிலேயர் அடைந்த பலஹீனமும், அப்பொழுது ஆசியா எங்கும் ஏற்பட்ட சூழ்நிலையும், மஹாத்மா காந்தியடிகளின் தலைமையின் கீழ் காங்கிரஸ் நடத்திய சுதந்தரப் போராட்டமுமே ஆங்கிலேயர் செய்த இம் மகத்தான முடிவுக்கு முக்கிய காரணங்களாகும். "இனி நாம் இந்தியாவில் ஆட்சி புரிய முடியாது" என்று தீர்மானித்த பிரிட்டிஷார் உடனேயே முடிதுறப்பதற்கான ஏற்பாடுகளையும் சட்டங்களையும் செய்தனர். இந்திய சுதந்தரச்சட்டம் என்று 1947-இல் அவர்களுடைய பார்லிமெண்டில் ஒரு சட்டம் இயற்றினர். இதன்படி இந்தியா இரண்டு துண்டுகளாக்கப்பட்டது. 564 துண்டுகளாக்கப்பட்டது என்று சொல்வதும் மிகையாகாது. ஏனென்றால் பிரிட்டிஷார் ஆண்டு வந்த மாகாணங்கள் தான் 'இந்தியா' என்றும் 'பாகிஸ்தான்' என்றும் இரண்டு பெரிய தேசங்களாக்கப் பட்டன. பிரிட்டிஷ் வல்லமைக்கு அடங்கியிருந்த 562 சுதேசமன்னர்களின் ஆட்சிக்குட்பட்ட சமஸ்தானங்கள் எல்லாம் கூட, ஒவ்வொன்றும் ஒரு சுதந்தர நாடாக்கப்பட்டதுபோல்தான் முதலில் ஒரு தோற்றம் அளித்தது. ஆனால் இந்நிலைமை அதிக நாள் நீடிக்கவில்லை. இந்தச் சமஸ்தானங்கள் எல்லாம் இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோ சேர்க்கப்பட்டன. இந்தியாவுடன் சுமார் 500 சமஸ்தானங்களை நமது வல்லபாய் படேல் எப்படிச் சேர்த்தார் என்பது ஓர் அதிசயம். அது தனித்த சரித்திரம். 15-8-1947-ல் சுதந்தரமடைந்த இந்தியாவும் பாகிஸ்தானும் "குடியேற்ற நாடு அந்தஸ்து" (Dominion States) என்ற நிலைமையில்தான் இருந்தன. அதாவது உண்மையில் சுயராஜ்யம்; ஆனால் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தவை; பிரிட்டிஷ் மன்னர் பெயரளவில் மட்டில் இந்நாடுகளுக்கும் மன்னர் — என்ற நிலைமையில் இருந்தன. இந்தியாவில் அரசியல் அல்லது ஆட்சி முறையை நிர்ணயம் செய்ய இந்தியாவில் ஒரு அரசியல் நிர்ணய சபையும் (Constituant Assembly) அதேவிதம் பாகிஸ்தானுக்கு ஒரு அரசியல் நிர்ணய சபையும் ஏற்படுத்தப்பட்டன.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபை இன்னும் யாதொரு முடிவுக்கும் வரவில்லை. இப்பொழுதும் பாகிஸ்தான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு 'டொமினியன்' தான். ஆனால் இந்திய அரசியல் நிர்ணய சபை இந்தியாவின் அரசியல் என்ன என்று வகுத்து விட்டது. இதற்குத்தான் "இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்" என்று பெயர். (The Constitution of India.) இச்சட்டம் 26—11—1949-இல் இயற்றப் பட்டது. 26—1—1950 முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டப்படி இந்தியா ஒரு சுதந்தரக் குடியரசு. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் இந்தியாவுக்கும் இனி எவ்வித சட்டபூர்வமான சம்பந்தமும் இல்லை. பிரிட்டிஷ் மன்னர் இப்பொழுது இந்தியாவுக்கு மன்னர் அல்ல. முடிசூடிய மன்னருக்குப் பதிலாகத் தான் நாம் 5 வருடங்களுக்கு ஒரு முறை ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவோம். நம்முடைய நாட்டை நாமே ஆண்டு கொள்ளும்முறை எப்படி என்பதுதான் அரசியல் அமைப்புச் சட்டம். சட்டசபைகள் சம்பந்தப்பட்டவரை வெள்ளோட்டமாக இச்சட்டத்தைக் கவனிப்போம்.

இந்தியக் குடியரசின் நிலப்பரப்பு:— ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலத்தில் இந்தியாவில் 11 பிரிட்டிஷ் மாகாணங்களும் 562 சமஸ்தானங்களும் இருந்தன. பாகிஸ்தானிடம் சேர்ந்த மாகாணங்களும் சமஸ்தானங்களும் போக நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாகாணங்கள் 9-ம் நம்முடன் சேர்ந்த சமஸ்தானங்களும் இப்பொழுது "இந்திய யூனியன்" என்று வழங்கப்படுகின்றது. ஆனால் சமஸ்தானங்கள் பழைய உருவத்தில் இல்லை. இவைகளில் சுமார் 200 சமஸ்தானங்கள் மாகாணங்களுடன் சேர்ந்துவிட்டன. சுமார் 300 சமஸ்தானங்கள் ஒன்றோடொன்று இணைந்துகொண்டு இப்பொழுது 8 பெரிய ராஜ்யங்களாக இருக்கின்றன. அவைகளில் பழைய எல்லை மாறாமலும் வேறொன்றுடன் சேராமலும் இருப்பவை மைசூர், ஹைதராபாத், காஷ்மீர் இவை மூன்றுதான். இந்தச் சமஸ்தானங்களைத் தவிர இந்திய யூனியனால் நேரடியாக நிர்வாகம் செய்யப்படுபவை டில்லி, குடகு, போபால், போன்ற 10 இடங்கள் இருக்கின்றன. இனி மாகாணங்களுக்கும், சமஸ்தானங்களுக்கும் மேலே சொன்ன தனி இடங்களுக்கும் ஒவ்

வொன்றிற்கும் "ராஜ்யம்" என்று பெயர். ஆங்கிலத்தில் "ஸ்டேட்" (State) என்பது. இந்திய யூனியன் என்பது மேலே கண்ட 27 "ராஜ்யங்கள்" அடங்கியது. இந்த 27 ராஜ்யங்களின் ஐக்கியம் என்று சொல்லலாம். இனி எந்த ராஜ்யமும் இந்திய யூனியனை விட்டு வெளியே போக முடியாது. (காஷ்மீருக்கு மட்டில் தனி விதி.) ஆனால் ஒன்றாக் கொன்று எல்லை மாற்றிக் கொள்ளவும் புது ராஜ்யங்களாகவும் அமைத்துக்கொள்ளவும் இடம் உண்டு. இவை தவிர புதுச்சேரி, காரைக்கால் போன்ற இந்தியாவிலுள்ள அயல் நாட்டுத் துண்டுகளும் இந்திய யூனியனில் சேர்ந்து கொள்ள வசதி இருக்கின்றது. இச்சட்டத்தில் இந்த 27 ராஜ்யங்களும் 1-வது ஜாப்தாவில் (A. B. C.) ஏ. பி. ஸி. என்று மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பழைய பிரிட்டிஷ் மாகாணங்கள் A பகுதியாகவும், சமஸ்தானங்கள் B பகுதியாகவும், மற்றத் துண்டுகள் C பகுதியாகவும் காட்டப் பட்டிருக்கின்றன. இவைகளின் விவரம்.

(A) ஏ. ராஜ்யங்கள்: (எற்கனவே மாகாணங்கள்) (1) அஸ்ஸாம் (2) மேற்கு வங்காளம் (3) பீஹார் (4) பம்பாய் (5) மத்திய மாகாணம் என்ற மத்திய பிரதேசம் (6) மதராஸ் (7) ஒரிஸா (8) கிழக்குப் பஞ்சாப் (9) ஐக்கிய மாகாணம் என்ற உத்தர பிரதேசம்.

(B) பி. ராஜ்யங்கள்: (எற்கனவே சமஸ்தானங்கள்) (1) ஹைதராபாத் (2) காஷ்மீர் (3) மத்யபாரத் (4) மைசூர் (5) பாடியாலா (6) ராஜஸ்தான் (7) சௌராஷ்டிரம் (8) திருவாங்கூர் கொச்சி ஐக்கியம்.

(C) ஸி. ராஜ்யங்கள்: (1) அஜ்மீர் (2) போபால் (3) பிலாஸ்பூர் (4) குடகு (5) டில்லி (6) ஹிமாசலப் பிரதேசம் (7) கட்ச் (8) மணிப்பூர் (9) திரிபுரா (10) விந்தியப் பிரதேசம்.

இவை தவிர D பிரிவில் அந்தமான், நிகோபார் தீவுகள் காணப்பட்டிருக்கின்றன. இவைகள் 'ராஜ்யங்கள்' அல்ல. ஆனால் இந்தியாவைச் சேர்ந்தவை.

அரசியல் அமைப்பில் உள்ள ஸ்தாபனங்கள்:

இந்திய யூனியன் உறுப்புகள் (அகில இந்தியாவுக்கும் அவரவர் வரம்புக்குள் அதிகாரம் உண்டு.)	1. ஜனாதிபதி 2. இந்திய யூனியன் மந்திரி சபை 3. ராஜ்ய சபை 4. மக்கள் சபை 5. சுப்ரீம் கோர்ட் 6. ஆடிட்டர் ஜெனரல் 7. எலெக்ஷன் கமிஷன்
ஒவ்வொரு "ராஜ்யத்திற்கும்" உள்ள உறுப்புகள் (அவரவர்ராஜ்ய எல்லைக்குள் அவரவர் வரம்புக்குள் அதிகாரம் உண்டு)	1. கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர் 2. மந்திரி சபை 3. சட்டசபை 4. மேல் சட்ட சபை (சில ராஜ்யங்களுக்கு மட்டில்) 5. ஹை கோர்ட்

ஜனாதிபதி: குடியரசுக்கு முடி சூடிய மன்னர் எவருமில்லை. வம்ச பரம்பரையாக ஆட்சி புரியும் ராஜ வம்சமும் கிடையாது. மன்னருக்குப் பதில்தான் ஜனாதிபதி. மன்னருடைய மாட்சிமையும், அந்தஸ்தும் அதிகாரமும், கௌரவமும் ஜனாதிபதி என்ற பதவி வகிப்பவருக்கு, பதவி வகிக்கும் காலத்தில், உண்டு. அமெரிக்க ஜனாதிபதி பொதுமக்களின் (ஓட்) வாக்கினால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றார். இந்திய யூனியன் ஜனாதிபதியை யூனியன் பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், எல்லா 'ராஜ்யங்களி'லுமுள்ள (கீழ்) சட்டசபை அங்கத்தினர்களும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும். ஜனாதிபதி 5 வருடம் பதவி வகிப்பார். முதல் ஜனாதிபதியை மட்டில் 26—1—1950-க்கு முன் அரசியல் நிர்ணய சபையே நியமிக்கச் சட்டம் இடம் கொடுத்தது. குடியரசு நடப்பது ஜனாதிபதி அவர்களின் பெயரால். குடியரசு வந்ததும் கவர்னர் ஜெனரல் என்ற பதவி மறைந்தது.

ஜனநாயகம்: இந்தியக் குடியரசு ஜனநாயக முறையில் நடைபெறும். பொது ஜனங்கள் எல்லோரும் அடிக்கடி கூடிக் கலந்து அரசியல் நடத்துவது எந்நாட்டிலும் அசாத்தியமான காரியம். அதுவும் இவ்வளவு பெரிய தேசத்தை, இவ்வளவு ஜனங்கள் அடங்கிய ஒரு நாட்டை அவ்விதம் எப்படி ஆளமுடியும். இதற்கு மற்றத் தேசங்களில் ஒரு வழி கண்டு பிடித்திருக்கின்றனர். அதைத்தான் நாமும் கைக்கொண்டிருக்கிறோம். அதாவது அந்தந்த

இடங்களில் உள்ள மக்கள், ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பார்கள். தேசமெங்கும் தேர்தல் (எலக்ஷன்) நடைபெறும். 21 வயது பூர்த்தியான ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு (ஓட்) உண்டு. இதைத்தான் 'அடல்ட் பிராஞ்சைஸ்' அல்லது சர்வஜனவாக்கு என்பது. சர்வஜன வாக்கினால் நாம் இந்திய யூனியன் "மக்கள் சபை" அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்போம். 7½ லக்ஷம் ஜனங்களுக்குக் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது இருப்பார். அவ்விதமே நமது மாகாண சட்டசபைக்கும் சுமார் 75 ஆயிரம் ஜனத்தொகை உள்ள இடங்களுக்கு ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்போம்.

அவ்விதம் இப்பொழுது நடக்கப் போகும் பொதுத் தேர்தலில் நமக்கு நம்பிக்கையுள்ளவர்களை அல்லது இஷ்டப்பட்டவர்களை இந்தத் தேர்தலில் பொறுக்கி எடுத்தவுடன் குடிமக்களாகிய நம்முடைய கவலை, அதாவது இந்நாட்டை நாமே ஆண்டு கொள்ளவேண்டிய கவலை, அடுத்த எலெக்ஷன் தினம் வரையில் கிடையாது. அது அந்தப் பிரதிநிதியைச் சேர்ந்தது. இதுதான் நேரடியாக / மக்கள் உபயோகிக்கக்கூடிய ராஜாங்க அதிகாரம். இதைத்தவிர வேறு முறை சாத்தியமானதல்ல. இதை ஆங்கிலத்தில் பிரதிநிதித்வ ஜனநாயகம் என்று சொல்வது. நாம் பொருக்கி எடுத்த நமது இந்திய யூனியனின் பிரதிநிதிகள் அவர்களுக்குள் நம்பிக்கையுள்ளவர்களைக்கொண்டு அகில இந்தியாவுக்கும் ஒரு மந்திரி சபை அமைத்துக் கொண்டு இந்திய யூனியனை நிர்வாகம் செய்து வருவார்கள். அவ்விதமே நாம் பொறுக்கி எடுத்த மாகாண சட்டசபைப் பிரதிநிதிகள் தங்களுக்குள் ஒரு மந்திரிசபை அமைத்துக் கொண்டு இந்த மாகாணத்தின் ஆட்சியை நடத்துவார்கள். மந்திரி சபைகளைத்தான் 'சர்க்கார்' என்று சொல்வது. பொது மக்கள் ஒன்றிரண்டு பெயர்களுக்கு இந்த இந்திய யூனியன் சர்க்காரோ, மாகாண சர்க்காரோ பிடிக்க வில்லையானால் ஒன்றும் செய்ய முடியாது. அத்துடன் இல்லை. மக்களின் பெரும்பான்மையோருக்குக் கூடத் திடீரென்று இந்திய யூனியன் சர்க்காரோ அல்லது மாகாண சர்க்காரோ பிடிக்கவில்லை என்றாலும் ஒன்றும் செய்ய முடியாது. ஒரு சட்டசபைப் பிரதிநிதியை உங்களுக்கு(எலெக்ஷனுக்குப் பிறகு) பிடிக்கா விட்டாலும் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. அடுத்த எலெக்ஷன் வரை காத்திருந்து அவர்களுக்கு நீங்கள் தகுந்த படிப்பினை காண்பிக்கலாம். இந்திய யூனியனின் மக்கள் சபைக்கு (ஹவுஸ் ஆப் தி பீபிள்) 5 வருடங்களுக்கு ஒரு முறை எலெக்ஷன் நடைபெறும். அவ்விதம்மே ராஜ்யங்களிலுள்ள கீழ் சட்டசபைகளுக்கும். இந்திய யூனியனில் உள்ள ராஜ்யசபையும், சில ராஜ்யங்களில் உள்ள மேல்சபையும் கலைக்கப்படமாட்டா. ஆனால் அவைகளில் உள்ள சுமார் 3-ல் 1 பங்கு அங்கத்தினர்களுக்கு இரண்டு வருடங்களுக்கொருமுறை எலெக்ஷன் நடைபெறும். சர்வஜனவாக்கினால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் ஏதாவது படபடப்பாகச் சட்டங்கள் இயற்ற முற்பட்டால் இந்த மேல் சபைகள் அவைகளைக் கொஞ்சம் நிதானப்படுத்தலாம். அதற்குமேல் அச்சபைகளுக்கு அதிகாரமில்லை. இந்திய யூனியனில் மக்கள் சபையும் ராஜ்யங்களில் கீழ் சட்டசபைகளும்தான் சக்தி வாய்ந்தவை.

தனித்தொகுதி மறைந்தது: சுதந்திர இந்தியாவில் இனி முஸ்லீம்களுக்குத் தனித் தொகுதி கிறிஸ்துவர்களுக்குத் தனித்தொகுதி என்பது கிடையாது. எல்லோரும் சேர்ந்துதான் நமது பிரதிநிதிகளைப் பொறுக்க வேண்டும். நம் பிரதிநிதிகளும் எந்த மதத்தைத் தழுவி இருந்தாலும் இருக்கலாம். ஆனால் முதல் 10 வருஷங்களுக்கு ஷெடியூல் ஜாதியினருக்கும் ஷெடியூல் ஆதிவாசிகளுக்கும் அவரவர் ஜனத்தொகைக்குத் தக்கபடி வீதாசாரமான ஸ்தானங்கள் ஒதுக்கப்படும்.

நமக்குச் சட்டம் செய்வது யார் - எப்படி?

நடைமுறையில் நாம் கீழ்ப்படிய வேண்டிய 'சட்டங்கள்' பலவகைப்பட்ட ஸ்தாபனங்களாலும், தனி அதிகாரிகளாலும், செய்யப்படுகின்றன. இவைகள் சட்டங்கள், விதிகள், உத்தரவுகள் என்று பல பெயர்களுடன் இருப்பதுடன் சில விஷயங்களில் சட்டம் செய்யும் அதிகாரம் படிப்படியாகக் கீழே வந்து ஒரு ஜில்லா அதிகாரியால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் கூட, 'சட்டம்' என்ற பெயருடன் விளங்கும். எந்த வகையான சட்டம் மீறப்பட்டாலும் அதை மீறியதற்கான தண்டனை அல்லது நஷ்டம் உண்டு. சட்டத்தை மீறியவர்கள் நீதி ஸ்தலங்களில் எந்தக் கட்சி சொன்னாலும், சொல்லாவிட்டாலும் அவர்கள் ஒரு கட்சிமட்டும் சொல்ல முடியாது. அதாவது, 'எனக்கு இவ்விதம் ஒரு சட்டம் இருக்கிறதென்று தெரியாது; ஆகையால் அதை மீறிவிட்டேன்' என்று சொல்லும் கட்சியை ஒரு நீதி ஸ்தலமும் கேட்காது. கேட்கவும் கூடாது. ஒவ்வொருவரும் சட்டங்களைத் தெரிந்துகொண்டிருப்பதாகவே பாவிக்கப்படும்.

சென்னை-600 008
187714

நமது சட்டங்களை யார் செய்கின்றனர் என்று கவனிப்போம். இந்திய யூனியன் என்ற இந்திய ஐக்கியத்தில் 17 பெரிய ராஜ்யங்களும், 10 சிட்டு ராஜ்யங்களும் உண்டு என்று சொன்னோம். மாகாணங்கள் என்று வழங்கப்பட்ட பிரதேசங்களுக்கும் குடியரசு அமைப்பில் 'ராஜ்யம்' (State) என்றுதான் பெயர். 'மதராஸ் ராஜ்யம்' என்பது ஏற்கனவே 'மதராஸ் மாகாணம்' என்று அழைக்கப்பட்ட பிரதேசம்தான். இனி இந்தியக் குடியரசில் இருப்பவர்கள் எவருக்கும் இரண்டு சர்க்கார்கள் உண்டு; இரண்டு சட்ட மன்றம் உண்டு. அதாவது, ராஜ்ய சர்க்கார்ஒன்று; அதற்குமேல் இந்திய யூனியன் சர்க்கார் ஒன்று. ராஜ்ய சட்ட சபை ஒன்று; இந்திய யூனியன் பார்லிமெண்ட் ஒன்று. தமிழ் நாட்டிலுள்ள நமக்குச் சில விஷயங்களில் இந்திய யூனியன் டில்லி பார்லிமெண்டால் சட்டம் இயற்றப்படும். சில விஷயங்களில் சென்னை ராஜ்ய (மாகாண) சட்ட மன்றத்தால் சட்டங்கள் இயற்றப்படும்.

இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டப்படி அகில இந்தியாவிற்கும் சட்டம் இயற்ற அதிகாரம் உள்ளவர்கள்: (1) இந்திய யூனியன் பார்லிமெண்ட் (2) ஜனதிபதி. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் சட்டம் செய்ய அதிகாரம் உள்ளவர்கள்: (1) ராஜ்ய சட்ட மன்றம். (2) கவர்னர்.

சட்டம் செய்யும் அதிகாரம் பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது: நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 7-ஆவது அனுபந்தத்தில் 3 ஜாப்தாக்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அத்ாவது, இந்திய யூனியன் பார்லிமெண்ட் எந்த எந்த விஷயங்களில் சட்டம் செய்யலாமென்று யூனியன் ஜாப்தாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விஷயங்களில் இந்திய யூனியன் பார்லிமெண்டும், சில நெருக்கடிகளில், ஜனதிபதியும்தான் நமக்குச் சட்டம் செய்யலாம். அந்த ஜாப்தாவில் கண்ட சங்கதிகளைப்பற்றி சென்னை சட்ட சபையோ வேறு எந்த ராஜ்ய சட்ட சபையோ சட்டம் செய்ய அதிகாரமில்லை. அப்படிச் செய்தால் அவை செல்லமாட்டா. அதுபோலவே ராஜ்ய சட்ட சபைகள் எந்த எந்த விஷயங்களில் சட்டம் இயற்றலாமென்று ஒரு ஜாப்தா இருக்கின்றது. அவ்விஷயங்களில் சட்டம் செய்ய ராஜ்ய சட்டசபைகளுக்குத்தான் அதிகாரம். இந்த ஜாப்தாவில் கண்ட விஷயங்களைப்பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்ட் சட்டம் செய்தால் அது செல்லாது.

இந்த இரண்டு ஜாப்தாக்களைத் தவிர ஒரு மூன்ருவது ஜாப்தாவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் கண்ட விஷயங்களைப் பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்டும் சட்டம் செய்யலாம்; ராஜ்ய சட்ட சபைகளும் சட்டம் செய்யலாம்; இருவர்களாலும் ஒரே விஷயத்தில் முரண்பாடாகச் சட்டங்கள் செய்யப்பட்டிருந்தால், இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்படும் சட்டம்தான் செல்லும் என்று பொதுவாகச் சொல்லலாம். ஆனல் இந்த மூன்ருவது ஜாப்தாவில் கண்ட ஒரு விஷயத்தைப் பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்டால் ஒரு சட்டம் செய்யப்பட்டு பிறகு ஒரு ராஜ்ய சட்ட சபை அதற்கு மாருகச் சட்டம் செய்து அச்சட்டத்தை ஜனதிபதி அங்கீகாரம் செய்துவிட்டால் அந்த ராஜ்யத்தில் மட்டில் அதன் சட்டம் செல்லும். மேலும், தேசத்திற்கே ஆபத்து என்று ஜனதிபதியால் பிரகடனம் செய்யப்பட்டால் அந்தச் சமயத்தில் எல்லா விஷயங்களிலும் இந்தியா பார்லிமெண்டுக்குச் சட்டம் செய்ய அதிகாரம் வந்துவிடும். தவிர இந்திய யூனியன் ராஜ்ய சபையில் மூன்றில் இரண்டு பங்குள்ள பெரும்பான்மை அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தின் பேரில் ராஜ்ய ஜாப்தாவில் கண்ட எந்த விஷயங்களிலும் இந்திய யூனியன் பார்லிமெண்டே சட்டம் செய்யலாமென்று தீர்மானிக்கலாம்.

இந்திய யூனியன் பார்லிமெண்டால் பிரத்தியேகமாகச் சட்டம் செய்யக்கூடிய விஷயங்கள் 97; ராஜ்ய சட்ட சபைகளால் சட்டம் செய்யக்கூடிய விஷயங்கள் 66; இருவரும் சட்டம் செய்யககூடிய விஷயங்கள் 47; மேற்கண்டவிதம் தனித்தனி ஜாப்தாக்களில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஜாப்தாக்களில் காணப்படாமலிருக்கும் விஷயங்களைப் பற்றி இந்திய யூனியன் பார்லிமெண்ட்தான் சட்டம் செய்ய முடியும்.

இப்பொழுது வழக்குகளில் ஒரு முக்கிய பிரச்னையை நமது நீதி மன்றங்கள் தீர்மானித்து வருவதை நேயர்கள் கவனித்திருக்கலாம். அதாவது, ஒவ்வொரு சட்டமும் அதைச் செய்ய அதிகாரமுள்ள சட்டசபையால் ஏற்படுத்தப் பட்டதா என்று பரிசீலனை செய்வதுதான். அதிகாரமில்லாமல் ஒரு சட்ட சபையால் இயற்றப்பட்ட சட்டம் செல்லாதென்று நமது நீதி மன்றங்கள் சொல்லிவிடலாம். உதாரணமாக: தபால், தந்தி, ரயில்வே, யுத்தம் சமாதானம், சேனை, வருமானவரி, மரணவரி போன்ற விஷயங்களில் இந்திய யூனியன்

பார்லிமெண்ட்தான் சட்டம் செய்யலாம். இவ்விஷயங்களில் சென்னை ராஜ்ய சட்டசபை ஏதாவது சட்டம் செய்தால் செல்லாது. அது போலவே, விவசாயம், கல்வி, ஸ்தல ஸ்தாபனங்கள், போலீஸ் போன்ற விஷயங்களில் நமக்குச் சென்னை ராஜ்ய சட்ட சபைதான் சட்டம் செய்யலாம். அதற்கு மாருக இந்திய யூனியன் பார்லிமெண்டால் செய்யப்படும் சட்டம் செல்லாது. விவாகம், விவாக ரத்து, சிவில் கிரிமினல் விவகார முறை, விலைக் கட்டுப்பாடு, தொழிற் சங்கங்கள் போன்ற பல விஷயங்களில் இருவருக்கும் சட்டம் செய்ய அதிகாரமுண்டு. ஒன்றுக்கொன்று முரண்பாடு இருந்தால் இந்திய யூனியன் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம்தான் செல்லுமென்று பொதுவாகச் சொல்லலாம்.

டில்லி பார்லிமெண்டில் எத்தனை அங்கத்தினர்கள் உண்டு. சென்னை முதலிய ராஜ்யங்கள் ஒவ்வொன்றின் சட்ட சபைகளிலும் எவ்வளவு அங்கத்தினர்கள் இருப்பார்கள்.

	ராஜ்யங்களின் பெயர்	டில்லி பார்லிமெண்டின்		அந்தந்த ராஜ்ய சட்ட சபையின்	
		மக்கள் சபை அங்கத்தினர்கள்	ராஜ்யங்கள் சபை அங்கத்தினர்கள்	அசெம்பிளி கீழ் சபை அங்கத்தினர்கள்	மேல் சட்ட சபை அங்கத்தினர்கள்
A 1	அஸ்ஸாம்	12	6	108	மேல் சபை கிடையாது
2	பீஹார்	55	21	330	72
3	பம்பாய்	45	17	315	72
4	மத்திய பிரதேசம்	29	12	232	மேல் சபை கிடையாது
5	**மதராஸ் (சென்னை)**	75	27	375	72
6	ஒரிஸா	20	9	140	மேல் சபை கிடையாது
7	பஞ்சாப்	18	8	126	40
8	உத்தரப் பிரதேசம்	86	31	430	72
9	மேற்கு வங்காளம்	34	14	238	51
B 1	ஹைதராபாத்	25	11	175	மேல் சபை கிடையாது
2	காஷ்மீர்	6	4		ஷை
3	மத்தியபாரத்	11	6	99	ஷை
4	மைசூர்	11	6	99	40
5	பாடியாலா ஐக்கிய ராஜ்யங்கள்	5	3	60	மேல் சபை கிடையாது
6	ராஜஸ்தான்	20	9	160	ஷை
7	சௌராஷ்ட்டிரா	6	4	60	ஷை
8	திருவாங்கூர்—கொச்சி	12	6	108	ஷை
C 1	அஜ்மீர்	2 }	1	30	
2	குடகு	1 }		24	
3	போபால்	2	1	30	
4	பிலாஸ்பூர்	1 }	1		
5	ஹிமாசலபிரதேசம்	3 }		36	
6	டில்லி	4	1	48	
7	கட்ச்	2	1		
8	மணிபூர்	2 }	1		
9	திருபுரா	2 }			
10	விந்திய பிரதேசம்	6	4	60	
D	அந்தமான் தீவுகள்	1			
	மொத்தம்	496	204		

டில்லி பார்லிமெண்டின் 'மக்கள் சபை'யில் மொத்தம் 496 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அதில் 75 அங்கத்தினர்கள் சென்னை வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதைக் கவனிக்கவும். வாக்காளர்களால் சென்னை 'அசெம்பிளி' என்ற சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அங்கத்தினர்கள் 375.

சென்னை மேல் சபை (Legislative Council)க்கு 72 அங்கத்தினர்கள் இருப்பார்கள். (இவர்களுள் ஸ்தல ஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் (Local Authorities Constituency) 24; கல்விப் பட்டதாரிகளால் (Graduates Constituency) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 6; உபாத்தியாயர்களால் (Teachers Constituency) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 6; கீழ்ச் சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 24; விசேஷ யோக்கியதைக்காகக் கவர்னரால் நியமிக்கப்பட வேண்டியவர்கள் 12; ஆக 72.

இவ்விதம் இச்சட்டத்தால் இந்திய பார்லிமெண்ட் சபைக்கும் ராஜ்யங்களின் ஒவ்வொரு சட்ட சபைக்கும் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கண்டபடி பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பதற்காக, ஒவ்வொரு ராஜ்யத்தையும் தனித்தனித் தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் எவ்வளவு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், எந்தத் தொகுதிகளில் ஷெடியூல் ஜாதியினரின் பிரதிநிதிகளுக்காக எவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதென்றும் விவரமாக நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பிக்க ஜனாதிபதி அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இவ்விதம் உத்தரவு பிறப்பிக்குமுன் ஜனாதிபதி அவர்கள் 'தேர்தல் கமிஷன்' (Election Commission) என்ற ஸ்தாபனத்தைக் கலந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதி அவர்களால் செய்யப்படும் உத்தரவுகளில் எதாவது மாறுதல்கள் செய்ய வேண்டுமானாலும் செய்ய, பார்லிமெண்டுக்கு அதிகாரம் உண்டு. இதை அனுசரித்து ஜனாதிபதி அவர்களால் ஒவ்வொரு ராஜ்யத்தைப் பற்றியும் தனித்தனி உத்தரவுகள் பிறப்பித்து, பார்லிமெண்டால் முடிவாக நிர்ணயம் செய்யப் பட்டிருக்கின்றன. அத் தொகுதிகளில் தான் இப்பொழுது தேர்தல்கள் நடக்கின்றன.

'சர்க்கார்':—அரசாங்கத்தை நடத்துபவர்களுக்கு, 'சர்க்கார்' என்ற பொதுவான பெயர், சில சமயங்களில் 'சர்க்கார்' என்ற சொல் ஒரு குறுகிய அர்த்தத்திலும் உபயோகப்படுத்தப்படுகிறது. 'நேரு சர்க்கார்' என்று சொன்னால், ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியாக இருந்து அவருக்கு இஷ்டப்பட்டவர்களை தம்முடன் மந்திரிகளாக நியமித்துகொண்டு அரசாங்கத்தை நடத்தும் 'மந்திரி சபை'யைக் குறிப்பிடும். மாறி மாறி வரும் மந்திரி சபையையும் (Cabinet) சர்க்கார் என்று சொல்லலாம். மந்திரிகள் யாராக இருந்தாலும் நிரந்தரமாக அரசாங்கத்தை நடத்தும் சர்க்கார் உத்தியோஸ்தர்களையும் அதிகாரிகளையும் குறிக்கலாம் (Permanent Service). அவ்வப்பொழுது மாறி வரும் மந்திரிமார்களின் கொள்கைகளை இந் நிரந்தர சர்க்கார் அதிகாரிகள் நிறைவேற்றி வருவார்கள்.

அமெரிக்காவில் இருப்பது ஒரு குடி அரசுதான். இங்கிலாந்தில், பெயருக்கு முடிசூடிய அரசர் ஒருவர் இருந்தாலும், ஆட்சி நடத்துவது ஜனநாயக ஆட்சிதான். ஆனால் இவை இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. அமெரிக்காவில் நிர்வாக அதிகாரம் முழுவதும் ஜனாதிபதி ஒருவரிடமேதான், சட்டப்படி பொதுமக்களால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய ஐந்து வருட பதவிக் காலத்தில் அவர் சொந்தப் பொருப்பில் அரசாங்க நிர்வாகத்தை நடத்துவார். சட்ட சபைகளில் உள்ள பெரும்பான்மையோர் அவருக்கு விரோதமாக இருந்தால்கூட ஜனாதிபதியேதான் நிர்வாகத்தை நடத்துவார். அவருக்குச் சட்டப்படி யாதொரு மந்திரி சபையும் கிடையாது. ஆனால் நடைமுறையில் அவர் நிர்வாகத் தலைமை அதிகாரிகளைக் கலந்து கொண்டுதான் முக்கிய விஷயங்களில் முடிவு செய்வார். இது பழக்கவழக்கத்தில் தோன்றிய ஒரு முறை. அவர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுபவர். அவருடைய பதவிக் காலம் முடிந்ததும், ஜனங்கள் வேறு ஒருவரை ஜனாதிபதி ஆக்கலாம். ஆனால் இங்கிலாந்தில் நடை

பெறும் ஆட்சி முறை வேறுபட்டது. பெயருக்கு ஒரு மன்னர் இருக்கிறார். அவர் அரசாங்கம் நடத்துவதில் சிரத்தையோ பொறுப்போ எடுத்துக் கொள்ளமாட்டார். அதிகாரம் 'பார்லிமெண்டு' என்ற சட்ட சபையில் தான் இருக்கின்றது. பார்லிமெண்டில் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அங்கத்தினர்களாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எந்தக் கட்சியில் பெரும்பான்மை அங்கத்தினர்கள் இருக்கின்றார்களோ, அக்கட்சியின் தலைவர்தான் பிரதம மந்திரி யாவார். அவர் தமக்கு இஷ்டப்பட்ட மற்ற அங்கத்தினர்களைத் தம்முடன் மந்திரிகளாக இருக்கும்படி கூட்டிக்கொண்டு மந்திரிசபை (Cabinet) அமைப்பார். இம்மந்திரி சபைதான் அரசாங்கத்தை நடத்தும் 'சர்க்கார்'. பார்லிமெண்டில் பெரும்பான்மை பலம் இருக்கும் வரையில் இப்படி நடைபெறும். இப்பலம் குறைந்து, இனி பார்லிமெண்டில் பெரும்பான்மை அங்கத்தினர்கள் அம்மந்திரி சபையை ஆதரிக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டால், அந்த மந்திரி சபை கவிழும். அதாவது அவர்கள் தாமாகவே மன்னரிடம் ராஜினாமா கொடுத்து விடுவார்கள். பிறகு எந்தக் கட்சியில் பெரும்பான்மை அங்கத்தினர்கள் இருக்கின்றனரோ அக்கட்சித் தலைவரை மன்னர் அழைத்து, பிரதம மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்பார். இப்படி ஒரு மந்திரிசபைபோய், வேறு மந்திரி சபை வந்து அடிக்கடி 'சர்க்கார்' மாறிக்கொண்டே இருக்கும்.

இந்தியா ஒரு குடியரசாகவேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நமது ஜனாதிபதி அவர்கள் அமெரிக்க ஜனாதிபதியைப் போல் நேரடியாக நிர்வாகம் நடத்தமாட்டார். நமது ஜனாதிபதி அவர்கள் பிரிட்டிஷ் மன்னரைப் போலவேதான் பதவியிலிருப்பார். அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு இங்கிலாந்தில் இருப்பதுபோல் இந்திய யூனியன் பார்லிமெண்டின் பெரும்பான்மைக் கட்சியுடையதே. அக்கட்சித் தலைவர்தான் பிரதம மந்திரி ஆவார். மற்ற மந்திரிகளையும் அவர்தான் பொறுக்குவார். சட்டப்படி இம்மந்திரி சபையின் பொறுப்பு ஒரு கூட்டுப் பொறுப்பு. அதாவது எந்த முக்கிய விஷயங்களையும் எல்லா மந்திரிகளும் கலந்து செய்து அதன் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள். ஒரு மந்திரி செய்தது சரி அல்ல, அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை என்று வேறு மந்திரி வெளிப்படையாகச் சொல்ல முடியாது. மந்திரியாக அவர் இருக்கும் வரை பார்லிமெண்டிலும் அவ்விதம் சொல்ல முடியாது. தேவையானால், அபிப்பிராய பேதமுள்ள மந்திரிகள் மந்திரி சபையை விட்டு விலகிக் கொள்ளலாம். இவ்விதம் அமைக்கப்படும் 'சர்க்கார்' அல்லது மந்திரிசபைதான் தமது கொள்கைகளுக்கு ஏற்றவாறு பார்லிமெண்ட் மூலம் சட்டங்கள் செய்தும் நிர்வாகத்தை ஏற்றும் நடத்தும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் அதாவது ராஜ்யத்திலும், அமைக்கப்படும் மந்திரி சபையும், கீழ்ச் சட்டசபையின் பெரும்பான்மைக் கட்சியிலிருந்தேதான். அதன் தலைவர்தான் முதல் மந்திரி. அவர் மற்ற மந்திரிகளைச் சேர்த்துக்கொண்டு கூட்டுப் பொறுப்புடன் மாகாண அரசாங்கத்தை நடத்த வேண்டும்.

அரசாங்கத்தை நடத்துவது எந்த மந்திரி சபையாக இருந்தாலும், இந்திய அரசாங்கம் ஜனாதிபதி அவர்களின் பெயராலும் மாகாண (ராஜ்ய) அரசாங்கம் கவர்னர் (அல்லது ராஜப் பிரமுகர்) பெயராலும்தான் நடத்தப்படும். எந்தக் குறிப்பிட்ட மந்திரியால் ஒரு சர்க்கார் உத்தரவு ஏற்பட்டதென்று தெரியாது. ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி மந்திரிகள் வெவ்வேறான அபிப்பிராயங்கள் கொண்டிருந்தாலும் அதை வெளிப்படையாகக் காண்பிக்க மாட்டார்கள். சட்டப்படியும் காண்பிக்கக் கூடாது. ஏனென்றால் அவர்கள் வகிக்கும் பொருப்புக்குச் சட்டத்தில் (Collective responsibility) கூட்டுப் பொறுப்பு என்று பெயர்.

வாக்காளர்களும்—தேர்தலும்

உங்கள் பெயர் வாக்காளர் ஜாப்தாவில் இருக்கிறதா?

நீங்கள் ஒரு இந்தியப் பிரஜையாகவும் இருந்து 1-3-1950ல் உங்களுக்கு 21 வயதும் பூர்த்தியாகி இருந்தால் உங்கள் பெயர் கட்டாயமாக இரண்டு வகை வாக்காளர் ஜாப்தாக்களில் இருக்கும். அதாவது டில்லி பார்லிமெண்டுக்கு "மக்கள் சபை" (House of the People) அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய "வாக்காளர் ஜாப்தா"வில் (Parliamentary Electoral Roll) உங்கள் பெயர் இருக்கும். சென்னை 'அசெம்பிளி' என்ற கீழ்ச்சட்ட சபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய "வாக்காளர் ஜாப்தா"விலும் உங்கள் பெயர் இருக்கும். டில்லி பார்லிமெண்டுக்கு ஒரு பிரதிநிதியைப் பொறுக்கவும், சென்னை 'அசெம்பிளி' சட்ட சபைக்கு ஒரு பிரதிநிதியைப் பொறுக்கவும் நீங்கள் உங்கள் 'வாக்கை'க் கொடுக்கலாம். இதைத்தான் ஆங்கிலத்தில் "வோட்" (Vote) கொடுக்கும் உரிமை என்று சொல்வது.

இதைத் தவிர நீங்கள் 1-3-1947க்கு முன்பே பி. ஏ; எம் ஏ; பி. எஸ். ஸி. போன்ற பல வகையான கல்விப் பட்டங்களில் ஏதாவது ஒரு பட்டம் பெற்றிருந்தால் சென்னை மேல் சட்ட சபை (Legislative Council) அங்கத்தினர்களைப் பொறுக்கும் வாக்காளர் ஜாப்தாவிலும் உங்கள் பெயர் இருக்கும். எந்த எந்தப் பட்டங்கள் பெற்றிருந்தால் இந்த உரிமை உண்டென்று ஜாப்தா இருக்கிறது. அல்லது 1-3-1944க்குப் பின் 1-3-1950க்குள் குறைந்தது மூன்று வருடங்களாவது நீங்கள் ஒரு 'செகண்டரி' ஸ்கூலிலாவது அதற்கு மேற்பட்ட கல்விஸ்தானங்களிலாவது ஒரு உபாத்தியாயராக இருந்தாலும் சென்னை மேல் சட்ட சபை வாக்காளர் ஜாப்தாவில் உங்கள் பெயர் இருக்கும். அல்லது 1-3-1950ல் சென்னை ராஜ்யத்திலுள்ள ஒரு முனிசிபாலிட்டி அல்லது ஜில்லா போர்டு அல்லது கண்டோன்மெண்ட் அல்லது ஒரு மேஜர் கிராமப் பஞ்சாயத்து எதிலாவது நீங்கள் ஒரு அங்கத்தினராக இருந்திருந்தாலும் உங்கள் பெயர் சென்னை மேல் சட்ட சபை வாக்காளர் ஜாப்தாவில் இருக்கும்.

ஆனால் எந்த "வாக்காளர் ஜாப்தா"விலும் சிலருடைய பெயர்கள் இருக்கமாட்டா. அதாவது இந்தியப் பிரஜை அல்லாதவர்கள்; புத்தி சுவாதீன மற்றவர் என்று ஒரு கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்பட்டவர்கள்; தேர்தல் சம்பந்தமான குற்றங்களும் ஊழல்களும் செய்து அதனால் யோக்கியதை இழந்தவர்கள் இவர்கள் பெயர் எந்த வாக்காளர் ஜாப்தாவிலும் இருக்காது.

எந்தத் "தொகுதி"யின் வாக்காளர் ஜாப்தாவில் உங்கள் பெயர் இருக்கும்,

டில்லி பார்லிமெண்ட், சென்னை 'அசெம்பிளி' சட்டசபை இவை இரண்டுக்கும் 'தொகுதிகள்' (Constituencies) நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. எந்த எந்த இடங்கள் எந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன. இத்தொகுதிகளில் ஏதாவது ஒரு பார்லிமெண்ட் தொகுதியிலும், ஒரு அசெம்பிளி தொகுதியிலும் தான் உங்கள் பெயர் இருக்கும். நீங்கள் பல இடங்களில் வசித்து வந்தாலும் தொழில் செய்து வந்தாலும், ஒரு தொகுதியில் உங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ளச் சட்டப்படி உரிமை உண்டு. எந்தத் 'தொகுதி'யில் உங்கள் பெயர் இருக்கவேண்டுமென்றும் விதிகள் இருக்கின்றன. அதாவது எந்தத் தொகுதியில் 1-4-1947க்குப் பின் 31-12-1949க்குள் நீங்கள் குறைந்தது 180 நாட்களாவது 'சாதாரணமாய் வாசம்' செய்திருக்கின்றீர்களோ, அத்தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவில் தான் உங்கள் பெயர் இருக்கவேண்டும். 'சாதாரணமாய் வாசம்' செய்வது என்றால் என்ன என்றும் சட்டத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. வசித்து வருவது தவிர, ஒரு தொகுதியில் உங்களுக்கு ஒரு சொந்த வீடு இருந்தாலும் சரி, உங்கள் சுவாதீனத்தில் ஒரு வீடு இருந்தாலும் சரி, அதுவும் நீங்கள் அங்கே வசித்து வருவது போலவேதான் ஆகும். ஆனால், நீங்கள் இந்திய ராணுவப்படையைச் சேர்ந்து வேறு எங்கேயோ வசித்து வந்தாலும், உங்களுடைய சொந்த ஊர் எதுவோ அத்தொகுதியில் தான் உங்கள் பெயர் இருக்கும். உங்களுடன் வசிக்கும் உங்கள் மனைவியின் பெயரும் அங்கேதான் இருக்கும். சில குறிப்பிட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும், அவர்களுடன் வசிக்கும் அவர்களுடைய மனைவிகளுக்கும் இவ்விதம் அவரவர்கள் சொந்த ஊர் தொகுதியிலேயே அவரவர்கள் பெயர் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று ஜனாதிபதி அவர்கள் உத்தரவிடலாம். மேற்கண்ட

யோக்கியதாம்சங்கள் உங்களுக்கு இருந்தால்; அதாவது நீங்கள் ஒரு இந்தியப் பிரஜையாக இருந்து 21 வயது பூர்த்தியாகி, 180 நாட்கள் ஒரு தொகுதியில் வாசம் செய்திருந்தால், அத் தொகுதியின் "வாக்காளர் ஜாப்தாவில்" உங்கள் பெயர் இருக்க உங்களுக்கு உரிமை உண்டு.

மேலே சொல்லப்பட்டது டில்லி பார்லி மெண்ட் மக்கள் சபை தொகுதிகளுக்கும், சென்னை அசெம்பிளி சட்ட சபைத் தொகுதி களுக்கும் தயார் செய்யப்படும் வாக்காளர் ஜாப்தாக்களைப் பற்றியது. இந்த இரண்டு சக்திவாய்ந்த சபைகளுக்கும் நடக்கும் தேர்தல் களில் "வோட்" செய்ய உரிமை உள்ளவர் களுக்கு வயது, வாசம் இரண்டைத் தவிர சொத்து, படிப்பு, அல்லது தொழில், போன்ற வேறு எவ்விதமான யோக்கியதாம்சங்களும் வேண்டியதில்லை என்பதைக் கவனிக்கவும்- இதைத்தான் "சர்வ ஜனவாக்கு" (Adult Franchise) என்று சொல்வது.

ஆனால் சென்னை மேல் சட்ட சபைக்கு அப் படி அல்ல என்பதைக் கவனித்தோம். சிற்சில பதவிவகிப்பவர்களும், படிப்பில் பட்டம் பெற்ற வர்களும், தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் தான் இச்சபைக்கு வாக்காளர்கள் என்பதையும் கவனித்தோம். இதில் ஸ்தலஸ்தாபன அங்கத் தினர்கள் தொகுதி ஒவ்வொன்றுக்கும் தனித் தனி வாக்காளர் ஜாப்தாவும்; கல்விப் பட்டதாரி தொகுதிகளுக்கும் உபாத்தியாயர் தொகுதி களுக்கும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வாக் காளர் ஜாப்தாவும் தயார் செய்யப்பட்டிருக் கின்றன. ஸ்தல ஸ்தாபனத் தொகுதியில் 1-3-1950ல் முன் சொன்ன ஸ்தல ஸ்தாபனங் களில் பதவி வகித்தவர்கள் பெயர் இருக்கும். கல்விப் பட்டதாரிகள் எந்தத் தொகுதியில், 1-4-1947க்குப் பின் 31-12-1949க்குள் 180 நாள் வாசம் செய்திருக்கின்றார்களோ அத் தொகுதியில் அவர்கள் பெயர் இருக்கும். அது போலவே உபாத்தியாயர்கள் எந்தத் தொகுதி யில் மேலே கண்ட காலத்தில் 180 நாள் வாசம் செய்திருக்கின்றனரோ அத்தொகுதியில்தான் அவர்கள் பெயர் இருக்கும்.

வாக்காளர் ஜாப்தாவில் உங்கள் பெயர் தவறுதலாக விட்டுப் போயிருந்தால்

ஒவ்வொரு தொகுதியின் வாக்காளர் ஜாப் தாவும் முடிவாகப் பிரசுரம் செய்யப்படும் முன்பு, அவைகளில் உங்கள் பெயர் இல்லா விட்டால், அதையும் சேர்த்துக் கொள்ளப் பல சந்தர்ப்பங்கள் இருந்தன. இவைகளை நீங்கள் கவனிக்காமல் போயிருந்தாலும் பாதகமில்லை. ஏனென்றால் உங்கள் தொகுதியின் வாக்காளர் ஜாப்தா முடிவாகப் பிரசுரம் செய்யப்பட்டிருந் தாலும் கூட அதில் சேர்ந்து கொள்ள உங்களுக்கு உரிமை இருந்தும் உங்கள் பெயர் அதில் இல்லாவிட்டால் நீங்கள் தேர்தல் கமிஷனுக்கு ஒரு மனுப்போட்டால் உங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ளப்படும், ஆனல் இவ்விதம் போடப்படும் மனுவுடன் ரூ. 50 கட்ட வேண்டும். மனுப்போட வேண்டிய அதிகாரி யின் விலாசம்—"காரியதரிசி, தேர்தல் கமிஷன் 'பி' பிளாக், ரெசினு ரோடு, புது டில்லி" (Secretary, to the Election Commission, 'P' Block Raisina Road, New Delhi) என்ற விலாசத்திற்கு மனுப்போட வேண்டும். மனுவில் உங்கள் பெயர், விலாசம், சாதாரண மாய் வசிக்கும் இடம், வயது, தகப்பனர் பெயர், வாக்காளர் ஜாப்தாவில் உங்களைச் சேர்த்துக் கொள்ளத் தேவையான யோக்கியதாம்சங்கள் இவைகளை விவரமாய்க் கண்டு மனுப் போட வேண்டும். நீங்கள் கட்ட வேண்டிய ரூ. 50யும் ஒரு சர்க்கார் டிரஷரி, அல்லது இம்பீரியல் பாங்கியில் அல்லது ரிசர்வு பாங்கியில் கட்டி ரசீதையும் மனுவுடன் அனுப்பவேண்டும். இம்மனுவின் நகல் ஒன்றை அன்று தினமே, சென்னை ராஜ்ய பிரதான தேர்தல் அதிகாரிக்கும் (Chief Electoral Officer, Madras) அனுப்பவேண்டும். அவர் துரித மாக அத்தொகுதியில் தேர்தல் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசரைக்கொண்டு (Electoral Registration Officer) இம்மனுவைப் பரிசீலனை செய்து தேர்தல் கமிஷனுக்குத் தம் சிபார்சை அனுப்பு வார். பிறகுதான் உங்கள் பெயர் அத்தொகுதி யின் வாக்காளர் ஜாப்தாவில் சேர்த்துக் கொள்ளப்படும். பெயர் சேர்த்துக் கொள்ளப் பட்டாலும் இல்லாவிட்டாலும் நீங்கள் கட்டிய ரூ. 50 எந்த சந்தர்ப்பத்திலும் திருப்பிக்கொடுக் படமாட்டாது. தேர்தல் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசர் (Electoral Registration Officer) என்று ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கிறார். அந்தந்தப் பார்லி மெண்ட் தொகுதிகளில் அதிகாரமுள்ள ரிவன்யூ டிவிஷனல் ஆபீசர்கள் தான் அநேகமாக தேர் தல் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசர்களாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர். 18-9-1951 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் விபரம் கொடுக் கப்பட்டிருக்கின்றது கவனிக்கவும்.

வாக்காளர் ஜப்தாவில்பெயர் இருந்தும் உங்களுக்கு ஒரு வோட்டு உண்டா?

இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படிக்கும் அதை அனுசரித்துப் பார்லிமெண்ட்டால் இயற்றப்பட்ட ஜனப்பிரதி நிதிச்சட்டங்களின் படிக்கும் எந்த எந்த யோக்கியதாம்சங்கள் உள்ளவர்கள் எந்த எந்தச் சட்ட சபைகளுக்கு எந்தத் தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவில் பெயர் பதிந்து கொள்ளப்பட உரிமை உள்ளவர்கள் என்பதைக் கவனித்தோம். ஆனால் நீங்கள் "வோட்" போட முடியுமா என்பது ஒரு தனி விஷயம். அதைப்பற்றிய சில முக்கிய விதிகளை வாக்காளர்கள் கவனிப்பது அவசியமாகும்.

1. எந்தச் சபைக்கு எந்தத் தொகுதியில் தேர்தல் நடக்கின்றதோ அத்தொகுதிக்காக, சர்க்காரால் தயார் செய்யப் பட்டிருக்கும் "வாக்காளர் ஜாப்தாவில்" (Electoral Roll) உங்கள் பெயரும் இருந்தால் தான் நீங்கள் "வோட்" செய்யலாம். வாக்காளர் அல்லது "வோட்டர்" ஆக இருக்க உங்களுக்கு யோக்கிய தாம்சங்கள் இருந்தும் தவறுதலாகவோ எக் காரணத்தாலோ உங்கள் பெயர் அந்த "வாக்காளர்" ஜாப்தாவில் இல்லாவிட்டால் நீங்கள் "வோட்" போட முடியாது. (உங்கள் பெயர் விட்டுப் போயிருந்தால் தேர்தலுக்கு முன்பே நீங்கள் எப்படி உங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்ளலா மென்று வேறு இடத்தில் விளக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.)

2. "வோட்" போடும் சமயத்தில் இந்தியப் பிரஜை என்ற அந்தஸ்தை இழந்தவர்கள் "வோட்" போட முடியாது.

3. "வோட்" போட வேண்டிய சமயத்தில் ஒருவர் புத்தி சுவாதீன மற்றவர் என்று கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும் அவருக்கு "வோட்" கிடையாது.

4. தேர்தல் சம்பந்தமான குற்றங்கள் அல்லது ஊழல்களுக்காகச் சட்டப்படி "வாக்குரிமை"யை இழந்து விட்டவர்களும் "வோட்" போட முடியாது.

5. பல தொகுதிகளில் உங்கள் பெயர் "வாக்காளர் ஜாப்தா"க்களில் சேர்க்கப்பட்டிருந்தாலும் பொதுத் தேர்தலில் நீங்கள் ஒரு தொகுதியில் தான் "வோட்" செய்யலாம்; அதே ச்பைக்கு அதே விதமான வேறு ஒரு இடத்திலுள்ள தொகுதிக்கும் நீங்கள் "வோட்" செய்யக் கூடாது. உதாரணமாக டில்லி பார்லிமெண்ட் தேர்தலுக்காக உங்கள் பெயர் இரண்டு தொகுதிகளில் பதிவு செய்யப் பட்டிருந்தால் நீங்கள் பார்லிமெண்ட் தேர்தல் சம்பந்தப்பட்ட வரையில் எதாவது ஒரு இடத்தில் தான் 'வோட்' செய்யலாம்.

6. ஒரே தொகுதியின் வாக்காளர் ஜாப்தாவிலேயே உங்கள் பெயர் பல முறை காணப்பட்டாலும்—நீங்கள் ஒரு தடவை தான் "வோட்" செய்யலாம். இவ்விரண்டு விதிகளையும் நீங்கள் மீறினால் உங்கள் "வோட்" எதுவும் செல்லாது. இது ஒரு தேர்தல் ஊழல் எனப்படும். இதனால் நீங்கள் எந்தத் தேர்தல்களிலும் "வோட்" போடும் உரிமையை ஆறு வருடங்களுக்கு இழக்கவும் நேரிடலாம்.

7. வாக்காளர் ஜாப்தாவில் பெயர் இருந்தாலும், கோர்ட்டால் தண்டனை அடைந்து ஜெயிலில் இருப்பவர்களும், போலீஸ் கஸ்டடியில் இருப்பவர்களும் "வோட்" செய்ய முடியாது. ஆனால் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருப்பவர்களுக்கு மட்டில் இவ்விதி கிடையாது.

8. ஒரு தொகுதியில் இரண்டு அல்லது அதிகமான அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தால் நீங்கள் ஒரு அபேட்சகருக்கு ஒரு "வோட்" தான் கொடுக்கலாம். இரண்டு அல்லது அதிகமான "வோட்டு"களை ஒருவருக்கே கொடுப்பது உபயோகப்படாது.

—o—

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலாட்டா வேண்டாம். அது இப்பொழுது குற்றமாக்கப்பட்டிருக்கிறது.

உங்களுக்குப் பிடிக்காத ஒரு கட்சியால் நடத்தப்படும் ஒரு பொதுக் கூட்டத்தில், மற்ற நாட்களில் நீங்கள் எப்படி நடந்து கொண்டாலும் பாதகமில்லை; பொதுத் தேர்தல் அல்லது எலெக்ஷனுக்காக நடக்கும் 'மீட்டிங்' அல்லது கூட்டங்களைப் பற்றி மட்டில் ஒரு புதிய விதி ஏற்பட்டிருப்பதை நீங்கள் கவனிப்பது அவசியமாகும். ஏனென்றால்—ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று சர்க்கார் அறிக்கை பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் அத்தொகுதியில் தேர்தல் நடக்கும் நாள் வரை உள்ள காலத்தில் நடத்தப்படும் கூட்டங்களைப் பற்றியே இப்புது விதி. இக்காலத்தில் இந்நாட்டிலுள்ள பல பல கட்சிகள் கூட்டம் போட்டு

தங்கள் தங்கள் கொள்கைகளை வாக்காளர்களுக்குத் தாராளமாய் எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்ய இடையூறுகள் இல்லாமல் செய்யவே இப்புது விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விதக் கூட்டங்களுக்கு நீங்களும் போய், அங்கே நடக்கும் விஷயங்களைக் கவனிக்கலாம்; அதில் பங்கெடுத்தும் கொள்ளலாம். ஆனால் அது உங்களுக்குப் பிடிக்காத ஒரு கட்சியின் கூட்டமாக இருந்தால், அப்பொழுதும் தயவுசெய்து சும்மா இருங்கள். நீங்கள் அச்சமயத்தில் நேராகவோ, வேறு ஒருவரைத் தூண்டியோ அக்கூட்டத்தில் ஒரு காரியமும் நடத்த முடியாமல் கலாட்டா எதுவும் செய்ய வேண்டாம். ஏனென்றால் அப்படிச் செய்வது இப்பொழுது ஒரு குற்றமாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். அக்கூட்டத்தில் தலைமை வகிப்பவருக்கும் இப்புது விதியால் ஒரு விசேஷ உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. அதாவது அக்கூட்டத்தை நடத்த வொட்டாமல் 'கலாட்டா' செய்யும் நபர்களைப்பற்றி அவர் ஒரு போலீஸ் அதிகாரிக்குத் தெரிவிக்கலாம். அப்போலீஸ் அதிகாரி கலாட்டா செய்பவர்களின் பெயர் விலாசத்தை எழுதிக்கொண்டு பின்பு கிரிமினல் கேஸ் நடத்த ஏற்பாடு செய்வார். விலாசம் கொடுக்காதவர்களையும், பொய் விலாசம் கொடுப்பதாகச் சந்தேகப்படப்படுபவர்களையும் உடனே அரஸ்டு செய்யவும் போலீசாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

———o———

வாக்காளர்களே! ஜாக்கிரதை! இவை வேண்டாம்!

1. 'லஞ்சம்' வாங்கவேண்டாம்! ஒரு அபேட்சகர் தமக்கு 'வோட்' போடவேண்டுமென்பதற்காகவோ அல்லது வேறு அபேட்சகருக்கு வோட் போடவேண்டாமென்றோ வாக்காளருக்கு லஞ்சம் கொடுப்பதும் குற்றம்; அதை வாக்காளர் வாங்குவதும் குற்றம். இதற்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். 'லஞ்சம்' என்பது பணம் காசு வாங்குவது மட்டும் என்று நினைக்காதீர்கள். ஒரு அபேட்சகருடைய செலவில் உணவு அருந்துவதும், சிற்றுண்டி பானம் முதலிய உட்கொள்வதும், சினிமா முதலிய வேடிக்கைகள் பார்ப்பதும் சட்டப்படி 'லஞ்சம்' தான். ஆனால் இவ்வித லகுவான லஞ்சத்திற்குத் தண்டனையும் கொஞ்சம் லகுவாக இருக்கும். இதற்கு அபராதம் மட்டில் விதிக்கப்படலாம். இது தான் வித்தியாசம். மேலும் 'லஞ்சம்' கொடுத்து ஜயித்தவருடைய தேர்தலும் ரத்துச் செய்யப்படும். லஞ்சம் வாங்கிய வாக்காளர் தண்டனை அடைவது தவிர அவர் பெயர் வாக்காளர் ஜாப்தாவிலிருந்து அகற்றப் படலாம். ஆறு வருடங்களுக்கு அவருக்கு எந்தத் தேர்தலிலும் அவருக்கு வாக்குரிமை இருக்காது.

2. ஆள் மாருட்டம் செய்யவேண்டாம். பதவி மோகம் பிடித்துக் கையில் காசும் உள்ள ஓர் அபேட்சகர் தமக்குப் பெருவாரியான 'வோட்டு'களைச் சம்பாதித்துக் கொள்ளக் கையாளும் பல முறைகளில் 'ஆள் மாருட்டம்' என்பதும் ஒன்று. வாக்காளர் ஜாப்தாவில் அச்சடிக்கப் பட்டிருக்கும் பெயர்களில்—பலர் இறந்திருக்கலாம்; பலர் அயல்நாடு போயிருக்கலாம்; பல பெயர்கள் யாருடைய தென்றே அடையாளம் கண்டுபிடிக்கக்கூட முடியாமலே இருக்கலாம். இவ்விதமான பெயர்களைப் பொறுக்கி அப்பெயர் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆளைப்பிடித்து 'நான்தான் அந்த வாக்காளன்' என்று சொல்லி, 'வோட்' போடும்படி சொல்வதும் குற்றம்; செய்வதும் குற்றம். இக்குற்றத்திற்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இக்குற்றம் செய்யத் தூண்டிய அபேட்சகர் ஜயித்தாலும் தம் பதவியை இழக்க நேரிடும். ஆள் மாருட்டம் செய்த நபரும் தண்டனை அடைவதைத் தவிர, ஆறு வருடங்களுக்கு 'வோட்' உரிமையையும் இழப்பார்.

3. 'பாலட் பேபர்' என்ற வாக்குச் சீட்டை கையுடன் வெளியே கொண்டு வராதீர்கள்:—உங்கள் பேரில் சந்தேகமுள்ள ஓர் அபேட்சகர் 'உங்கள் வாக்குச் சீட்டை எந்தப் பெட்டியிலும் போடவேண்டாம்; கையுடன் வெளியே கொண்டு வந்து விடுங்கள்' என்று சொன்னால் அதைக் கேட்காதீர்கள். இதில் அபாயம் இருக்கிறது. நீங்கள் 'பாலட் பேபரை' போலிங் ஸ்டேஷனை விட்டு வெளியே கொண்டு வருவது ஒரு குற்றம். இதற்கு ஒரு வருடம் வரை சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இவ்விதம் ஒரு வாக்காளர் செய்வதாகச் சந்தேகம் ஏற்பட்டால் அவர் உடனடியாக அரெஸ்ட் செய்யப்படலாம். இக்குற்றம் செய்யத் தூண்டிய அபேட்சகர் ஜயித்தாலும் அவருடைய தேர்தல் ரத்துச் செய்யப்படலாம். வாக்கா

ளருக்கும் 'வோட் உரிமை' ஆறு வருடங்களுக்கு இருக்காது.

4. பொய்ப்புரளி வேண்டாம்:—ஒரு அபேட்சகர் தேர்தலில் ஜயிக்கக் கூடாதென்ற, எண்ணத்துடன் அவருடைய நடத்தையைப் பற்றியோ சொந்த யோக்கியதாம்சங்களைப்பற்றியோ வேண்டுமென்று வேறு ஒரு அபேட்சகரோ அவர் ஏஜண்டோ பொய்ப் பிரசாரம் செய்வது ஒரு பெரிய தேர்தல் ஊழலாகும். ஒரு சாதாரண வாக்காளர் இவ்விதம் செய்வதும் ஒரு தேர்தல் ஊழலாக எடுக்கப் பட்டிருக்கிறது. இவ்விதம் செய்யும் வாக்காளர் தம் வாக்குரிமையை ஆறு வருடங்கள் இழக்கநேரிடும்.

—o—

தேர்தல் தினத்தன்று

தேர்தல் நடக்கும் தினத்தன்று மட்டில் நீங்கள் கவனிக்க வேண்டிய சில புது விதிகள் இருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாய்க் கவனிப்போம்.

1. அன்று எந்தப் பொதுக் கூட்டத்திற்கும் போகாதீர்கள். தேர்தல் நடக்கும் நாளில் அத்தொகுதியில் நடக்கும் எவ்விதப் பொதுக் கூட்டத்திற்கும் நீங்கள் போக வேண்டாம். ஏனென்றால் அன்று தினம் எவ்விதப் பொதுக் கூட்டங்களைக் கூட்டுவதும், நடத்துவதும், அக்கூட்டத்திற்குப் போவதும் கூட ஒரு குற்றமாக்கப் பட்டிருக்கிறது. இதற்கு ரூ. 250 வரை அபராதம் விதிக்கப் படலாம்.

2. போலிங் ஸ்டேஷன் சமீபத்தில் ஜாக்கிரதை:—அத்தினத்தில் 'போலிங் ஸ்டேஷன்' என்ற தேர்தல் சாவடி இருக்கும் இடத்திலோ, அதற்கு 100 கஜத்திற்குள் இருக்கும் எந்த இடத்திலோ, பொது இடமானாலும் சரி, சொந்த இடமானாலும் சரி நீங்கள் எந்த அபேட்சகர் சார்பாகவும் பிரசாரம் செய்யாதீர்கள்; ஒரு வாக்காளரைப் பார்த்து அவருடைய "வோட்டை" எந்த அபேட்சகருக்குத் தான் போட வேண்டுமென்று கேட்காதீர்கள்; குறிப்பிட்ட ஒரு அபேட்சகருக்கு 'வோட் போட வேண்டாம்' என்றும் சொல்லாதீர்கள்; அல்லது ஒரு வாக்காளரைப் பார்த்து "நீங்கள் ஒருவருக்கும் வோட் போட வேண்டாம்" என்றும் கேட்டுக் கொள்ளாதீர்கள்; தேர்தல் சம்பந்தமான எவ்வித நோட்டீசையோ சின்னங்களையோ, வெளியில் தெரியும் விதம் காட்டிக் கொண்டிருக்காதீர்கள். ஏனென்றால் நீங்கள் மேற்கண்ட இடத்திற்குள் எதைச் செய்தாலும் அது ஒரு குற்றமாக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். இவ்விதமான குற்றம் செய்பவர்களைப் போலீசாரே அரெஸ்டும் செய்யலாம்.

3. அன்று ஒலி பெருக்கு ஏற்பாடு வேண்டாம். அன்று தினம், தேர்தல் நடக்கும் இடத்திலோ, அதற்கு நுழையும் இடத்திலோ, அருகில் உள்ள எந்தப் பொது இடத்திலும் சரி, சொந்த இடத்திலும் சரி நீங்கள் எவ்வித ஒலி பெருக்கியையும் உபயோகிக்க வேண்டாம்; கூச்சலிட வேண்டாம்; அமைதிக் குறைவாக நடந்து கொள்ளவும் வேண்டாம். இவ்விதம் நீங்கள் நேரிடையாகச் செய்யா விட்டாலும் அவ்விதம் செய்பவர்களுக்கு உதவியாகவோ, ஒற்றுமையாகவோ கூட இருக்காதீர்கள். ஏனென்றால் இவை எல்லாம் இப்பொழுது குற்றங்கள். மூன்று மாதம் வரை சிறை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இவ்விதம் செய்பவர்களை அரெஸ்டு செய்யும்படி போலிங் ஆபீசரே போலீசாருக்கு உத்தரவிடலாம். போலீசாரும் தாமாகவே அரெஸ்டும் செய்யலாம்; தேவையானால் போலீசார் இவ்விதமான செய்கைகளைப் பலாத்காரமாகவும் தடுக்கலாம்; ஒலி பெருக்கிகளையும் கைப்பற்றலாம்.

4. போலிங் அதிகாரி சொல்வதை மீறாதீர். தேர்தல் நடக்கும்போது 'போலிங் ஆபீசர்' என்ற அதிகாரிக்குச் சில விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் மறவாதீர்கள். 'வோட்' எடுக்கப்படும்போது சரியாக நடந்து கொள்ளாதவர்களையும், அவர் சட்டபூர்வமாகச் செய்யும் உத்தரவுகளின்படி நடக்காதவர்களையும் 'போலிங்' ஸ்டேஷனைவிட்டு அப்புறப்படுத்த அவருக்கு அதிகாரமுண்டு. அவருக்குப் போலீசார் உதவி செய்வார்கள். இப்படி அப்புறப்படுத்தப்பட்டவர்கள் மறுபடியும் அவ்வதிகாரியின் அனுமதியின்றி போலிங் ஸ்டேஷனுக்குள் வருவது குற்றம். இக்குற்றத்திற்கு 3 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப் படலாம். போலீசாரே' அரஸ்ட் செய்யலாம். ஆனால் ஒருவர் "வோட் செய்யும் உரிமையைத்

தடுக்கும் விதம் இவ்வதிகாரத்தை அவ்வதிகாரி உபயோகிக்கக்கூடாது.

5. தேர்தல் தினத்தன்று மோட்டார் சவாரி—'வேண்டாம்' என்று சொல்லி விடுங்கள். சாதாரண நாட்களில் உங்களைப் பற்றியோ உங்கள் கால்களைப் பற்றியோ எவ்வித மான கவலையும் படாத ஆசாமிகள் தேர்தல் தினத்தன்று உங்கள் வீட்டு வாயிலில் ஒரு மோட்டாரை வைத்துக்கொண்டு காத்திருந்து அதில் ஏறிச்சவாரி செய்யும்படி உங்களை வருந்தி அழைத்தாலும் "உங்கள் கார் வேண்டாம் ஐயா. நான் எப்படியாவது போலிங் ஸ்டேஷனுக்கு வருகிறேன்." — என்று சொல்லி விடுங்கள். ஏனென்றால் ஒரு அபேட்சகருடைய மோட்டார் காரிலோ, குதிரை அல்லது மாட்டு வண்டி களிலோ, வேறு எவ்வித வாகனங்களிலோ தேர்தல் தினத்தன்று ஏறிக்கொண்டு போலிங் ஸ்டேஷன் போய் 'வோட்' செய்வது ஒரு பெரிய தேர்தல் ஊழலாக இப்பொழுது சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அபேட்சகருடைய ஏஜண்டு அல்லது சிநேகிதர் வண்டியிலும் ஏறவேண்டாம். உங்களுக்குச் சொந்த மோட்டாரோ வண்டியோ இருந்தால் மட்டில் அதில் ஏறிச் செல்லுங்கள். போலிங் ஸ்டேஷன் கொஞ்சம் அதிக தூரத்திலிருந்தால் நீங்களும் உங்களைப் போலொத்த வாக்காளர்களும் சேர்ந்தோ தனித்தனியாகவோ உங்கள் சொந்தக் கைக்காசு கொடுத்து வாடகை வண்டி அமர்த்திக் கொள்வதைச் சட்டம் தடுக்க வில்லை. ஆனல் வாடகைக்கு ஒரு மோட்டாரோ, பஸ்ஸோ, 'ஆடோ ரிக்ஷா'வோ அமர்த்திக் கொள்ளக் கூடாது. மேலும் எப்பொழுதும் உள்ள பஸ் முதலிய 'பொது போக்குவரத்து சாதனங்களில்' உங்கள் சொந்தச் செலவில் டிக்கட் வாங்கிப் போய் வருவதிலும் ஆட்சேபனையில்லை. ஒரு அபேட்சகரோ அவருடைய ஏஜண்டோ உங்களை அவருடைய மோட்டாரிலோ வேறு வண்டியிலோ போலிங் ஸ்டேஷனுக்கு ஏற்றிச் சென்றால், அவருக்கு எவ்வளவு பெருவாரியான 'வோட்டு'கள் கிடைத்து அவர் ஜயித்தாலும் அவருடைய தேர்தல் இக்காரணத்தால் ரத்துச் செய்யபடலாம். இது ஒரு குற்றமுமாகும். ரூபாய் 250 வரை அபராதமும் விதிக்கப் படலாம்.

'போலிங் ஸ்டேஷன்' என்ற தேர்தல் சாவடியை நீங்கள் அடைந்த பிறகு.

நீங்கள் உங்கள் வாக்குரிமையைச் செலுத்துவதற்காக 'போலிங் ஸ்டேஷன்' என்ற தேர்தல் சாவடியை அடைந்த பின்பும் கவனிக்க வேண்டிய சில விதிகள் இருக்கின்றன. 'போலிங் ஸ்டேஷனி'ல் தேர்தல் தினத்தன்று அத்தேர்தலை அந்த இடத்தில் சட்டப்படிக்கும் அமைதியாகவும் நடத்துவதற்காக நியமிக்கப் பட்டிருக்கும் 'போலிங் ஆபீசர்' என்ற அதிகாரிக்கு அத்தினத்தில் சட்டத்தால் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பது ஞாபகமிருக்கட்டும். நீங்கள் அவ்வதிகாரி சொல்லும் விதம் அன்று தினம் அமைதியாக நடந்து கொள்ள வேண்டியது உங்கள் கடமையாகும்! நீங்கள் அவ்வதிகாரியிடமோ அவருக்காக உதவி செய்ய நியமித்திருக்கும் அதிகாரியிடமோ போய் நின்றவுடன் உங்கள் பெயர் முதலிய விவரங்களை அவ்வதிகாரி கேட்பார். அப்பெயர் வாக்காளர் ஜாப்தாவில் இருந்தால் உங்கள் இடது கை ஆள்காட்டி விரலைக் காண்பிக்கும்படி அவர் உங்களைக் கேட்பார். காட்டுங்கள். உங்களுடைய அவ்விரலில் ஒரு மைதடவப்படும். இதற்கும் ஆட்சேபிக்காதீர்கள். மை தடவப் பட்டவுடன் அவசர அவசரமாக அதை அழிக்கவும் முயற்சி செய்யவேண்டாம். அந்த மையானது லேசில் அழியாது. இவ்விதம் மைதடவிக் கொள்வது உங்கள் கௌரவத்திற்கு ஏதோ குறைவு என்று நினைக்கவேண்டாம். இவ்விதம் நீங்கள் செய்ய மறுத்தால் உங்களுக்கு 'பாலட் பேபர்' என்ற வோட்டுச் சீட்டே கொடுக்கப்பட மாட்டாது. நீங்கள் உங்கள் வாக்குரிமையை அன்று செலுத்தவும் முடியாது. இப்பொழுது சர்வஜன வாக்குரிமை கொடுக்கப் பட்டிருப்பதால் பெருவாரியாக ஆள் மாறாட்டம் செய்வதைத் தடுக்கவே இவ்விதம் ஓர் விதி செய்திருக்கின்றனர். மேலும் ஒரு முறை 'வோட்' செய்து விட்டவர்கள் எவரும் வேறு இடத்திலும் தம் பெயர் இருக்கும் காரணத்தினால் மற்றொரு தடவை 'வோட்' செய்வதையும் இது தடுக்கும். 'வோட்' போடப்போகும் உங்கள் இடதுகை ஆள் காட்டி விரலில் ஏற்கனவே இம் மை பூசப்பட்டிருந்தால் உங்களுக்கு போலிங் ஆபீசர் 'பால்ட் பேபர்' என்ற வோட்டுச் சீட்டையே கொடுக்கமாட்டார். மேலும் ஏற்கனவே விரலில் மை பூசப்பட்டவர்கள் மறுபடியும் 'வோட்'போட வந்தால் அவர்கள் அரெஸ்டும் செய்யப்படலாம். அவர்கள் பேரில் இரண்டு தடவை "வோட்" போட முயன்ற குற்றத்திற்காகக் கிரிமினல் வழக்கும் போடப்படும். ஆனல் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் பார்லிமெண்ட் சபைக்கும் சென்னைச் சட்ட சபைக்கும் இரண்டுக்கும் 'வோட்'

எடுக்கப்பட்டால் ஒரு சபைக்கு 'வோட்' செய்த வருக்கு மறுபடியும் அதே போலிங் ஸ்டேஷனில் வேறு சபைக்கு 'வோட்' போடுமுன், மைதடவப் பட மாட்டாது. அவருக்கு அந்த வேறு சபைக் கான 'பாலட்பேபரும்' கொடுக்கப்படும்.

துர் அதிர்ஷ்டவசத்தால் உங்களில் யாருக் காவது இடது கை ஆள் காட்டி விரல் இல்லாமல் போனால், இடது கையிலுள்ள வேறு ஒரு விரலில் இம் மை பூசப்படுமென்றும் இடது கையில் ஒரு விரல் கூட இல்லாதவருக்கு வலது கை ஆள்காட்டி விரலிலும் அது இல்லா விட்டால் வேறு விரலும், இரண்டு கைவிரல் களும் இல்லாவிட்டால் இடது புஜத்தின் நுனியிலும் அதுவுமில்லாவிட்டால் வலது கை புஜத்தின் நுனியிலும் இம்மை பூசப்படவேண்டு மென்று சொல்லும் ஒரு விதி அத்துடன் நின்று விட்டது.

மை தடவிய பிறகு

மை தடவும் கட்டம் இவ்விதம் முடிந்ததும், உங்களிடம் அவ்வதிகாரி ஒரு 'பாலட்பேபர்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் வாக்குச் சீட்டு ஒன்றைக் கொடுப்பார். இதைக் குறித்தும் கொள்வார். பாலட் பேபரைக் கையில் வாங்கிக் கொண்டு நீங்கள் 'போலிங் கம்பார்ட்மெண்ட்' என்ற வோட் போடும் அறைக்குள் போக வேண்டும். அவ்வறைக்குள் நீங்கள் போய் உங்கள் 'வோட்டை'ப் போட்டு விட்டு வெளியே வரும் வரையில் அங்கே வேறு ஒருவரும் உள்ளே வர அனுமதிக்கப்பட மாட்டார். மேலும் அவ்வறைக்குள் போன நீங்கள் யாருக்கு 'வோட்' போட்டீர்கள் என்பதையும் ஒருவரும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ரகசியமாக 'வோட்' போடுவதற்காகவே அவ்வறை அமைக்கப்பட்டிருக்கும். உங்கள் உண்மையான அபிப்பிராயப்படி நீங்கள் 'வோட்' செய்வது ஒருவருக்கும் தெரியாது. ஆனால் உங்களுக் கும் ஒரு கடமை உண்டு. அனாவசியமான கால தாமதம் செய்யாமல் உங்கள் 'வோட்' டைப் போட்டுவிட்டு வெளியே வந்து விட வேண்டும். வோட்போடும் அறையில் பல பெட்டிகள் இருக்கும். அத்தேர்தலில் எத்தனை அபேட்சகர்கள் போட்டி யிடுகின்றனரோ அத்தனை பெட்டிகள் இருக்கும். அதாவது ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஒரு பெட்டி வைக்கப்பட் டிருக்கும். முன் கூட்டியே ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஒரு சின்னம் கொடுக்கப்பட்டிருக்கும். (தேர்தல் சின்னங்கள்- என்ற தலைப்பில் இது விவரிக்கப்பட்டிருக்கிறது கவனிக்கவும்) அந்தந்த அபேட்சகருடைய சின்னம் அவரவருடைய பெட்டியில் ஒட்டப் பட்டிருக்கும். உதாரணமாக நீங்கள் எந்த அபேட்சகருக்கு 'வோட்' போட உத்தேசித் திருக்கின்றீர்களோ அவருடைய சின்னம் 'ஒட்டகம்' என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் ஒட்டகம் ஒட்டப்பட்டிருக்கும் பெட்டிக் குள் உங்கள் கையிலிருக்கும் பாலட்பேபரைப் போடவேண்டும். இதற்காகப் பெட்டியின்மேல் பக்கத்தில் ஒரு ஓட்டை இருக்கும். அந்த ஓட்டை வழியாகப் பாலட்பேபரைப் போட்டு விடுங்கள். உங்கள் வேலை முடிந்தது. கண் சரியாகத் தெரியாத காரணத்தினாலோ, வேறு சரீர அசௌக்கியத்தினாலோ பெட்டிகளின் மேல் இருக்கும் சின்னங்கள் உங்களுக்குத் தெரியாமல் இருந்தாலும் சரி, நீங்கள் பெட்டிக் குள் பாலட்பேபரைப் போடமுடியாமலிருந் தாலும் சரி, இவ்விஷயத்தைப் போலிங் ஆபீச ரிடம் சொல்லுங்கள். அவர் உங்களுடன் கூட வோட்போடும் அறைக்குள் வந்து, உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்டு அதன்படி பாலட் பேபரைப் பெட்டிக்குள் போடுவார். உங்கள் அபிப்பிராயத்தை அவர் மிக ரகசியமாகவே வைத்துக்கொள்வார். ஏனென்றால் இதை ரகசியமாக வைத்துக்கொள்ளாமல் அதை வேறு யாரிடமாவது அவர் சொல்வது ஒரு குற்றமாகும் என்பது அவருக்குத் தெரியும்.

—o—

நீங்கள் யார் என்ற சந்தேகம் ஏற்பட்டால்

நீங்கள் போலிங் ஸ்டேஷனுக்குப் போய் பாலட்பேபர் கேட்கும்போது நீங்கள் யார் என்பதைப்பற்றிச் சந்தேகம் உண்டாகலாம். இவ்விதமான சந்தேகம் தேர்தலில் போட்டி யிடும் அபேட்சகருக்கோ அவருடைய ஏஜெண்டுக் கோ உண்டாகலாம். அப்படியானால் அதை அவர் போலிங் ஆபீசரிடம் சொல்லுவார். அல்லது போலிங் ஆபீசருக்கே உங்களைப்பற்றிய சந்தேகங்கள் வரலாம். அப்பொழுது அவர் உங்களைச் சில கேள்விகள் கேட்பார். வாக்காளர் ஜாப்தாவில் இருக்கும் உங்களுடைய பெயர் விலாசம் முதலிய விவரங்களை அவ்வதிகாரி உங்களுக்கு அப்படியே படித்துக் காண்பித்து, "இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர் நீங்கள் தானா?" என்று கேட்பார். அதற்கு நீங்கள் பதில் சொல்லிய பிறகு—"இத்தொகுதிக்கு

நீங்கள் ஏற்கனவே உங்கள் "வோட்டை"ப் போட்டு விட்டீர்களா" என்றும்—கேட்பார். இதற்கும் நீங்கள் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் பதில் சொல்லவே மறுத்தால் உங்களுக்குப் பாலட் பேபர் என்ற வாக்குச் சீட்டே கொடுக்கப்படமாட்டாது. பதில் சொன்னாலும், நீங்கள்தான் வாக்காளர் ஜாப்தாவில் கண்ட நபர் என்றும், அதே தொகுதிக்கு வேறு எந்த இடத்திலும் அத்தேர்தலில் நீங்கள் "வோட்" போடவில்லை என்றும் சொன்னால்தான் உங்களுக்கு 'பாலட்பேபர்' கொடுக்கப்படும்.

—o—

உங்கள் பெயரால் ஏற்கனவே 'வோட்' போடப்பட்டிருந்தால்!

(Tendered Votes) இதுவும் நேரலாம். நீங்கள் போலிங் ஆபீசரிடம் உங்கள் பெயர் முதலிய விவரங்களைச் சொல்லி 'பாலட் பேபர்' கேட்கும் போது அவர் தம் கையில் இருக்கும் ஜாப்தாவை உற்றுக் கவனிப்பார். அதில் எந்த எந்த வாக்காளர்கள் ஏற்கனவே வந்து "வோட்" செய்து விட்டுப்போனார்கள் என்று அடையாளம் செய்து வைத்துக் கொண்டிருப்பார். அதைப் பார்த்து உங்கள் பெயருள்ள ஒருவர் ஏற்கனவே வந்து வோட்செய்துவிட்டுப் போய்விட்டதாக அவருக்குத்தெரிந்தால் அவ்வதிகாரிக்கு ஒருசங்கடமான நிலைமை ஏற்படுகின்றது. யார் உண்மையான வாக்காளர்? ஏற்கனவே வந்து 'வோட்' செய்து விட்டுப்போனவரா? அல்லது அதே பெயர் முதலிய விவரங்களைச் சொல்லிக் கொண்டு இப்பொழுது அவர் முன் நிற்கும் நீங்கள்தான் உண்மையான வாக்காளரா? என்று அவர் மனதில் குழப்பம் ஏற்படும். ஆனால் இக் குழப்பத்தை அவர் வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார். இச்சந்தர்ப்பத்தில் அவர் என்ன செய்ய வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. அவைகளை அனுசரித்து, உங்கள் பெயர் முதலிய விவரங்களைப்பற்றி உங்களைக் கேட்டு விட்டு உங்கள் கையிலும் ஒரு 'பாலட் பேபர்' கொடுப்பார். இதற்கு 'ஏற்கனவே போடப்பட்ட வோட்' (Tendered Vote) என்று சொல்வது. இது வேறு தினுசாகவே இருக்கும். இவ்விதமான சீட்டை நீங்கள் பெற்றுக்கொண்டதற்கு உங்கள் கையெழுத்தும் வாங்கிக் கொள்வார். இதை எடுத்துக்கொண்டு நீங்கள் 'வோட்'போடும் அறைக்குப் போகும்போது உங்களுடன் கூடவே அவ்வதிகாரியும் அவ்வறைக்குள் வருவார். இதை ஆட்சேபிக்காதீர்கள். இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் ரகசியமாக 'வோட்' செய்ய முடியாது. நீங்கள் யாருக்கு "வோட்" போடவேண்டுமென்று அவ்வதிகாரியிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். அச்சீட்டில் அவர் அதை எழுதுவார். உங்கள் பெயர், நம்பர், விலாசம் முதலியவைகளையும் அதில் எழுதுவார். இச்சீட்டை நீங்கள் மற்ற வோட்டர்களைப்போல் பெட்டியில் போடக்கூடாது. அதை அவ்வதிகாரியே வாங்கிக் கொண்டு இவ்விதமான 'வோட்டு'களுக்கென்று தனியாக வைத்திருக்கும் ஒரு ப்ரக்கெட்டில் அதையும் வைத்துக்கொள்வார். தேர்தல் முடிந்ததும் இவ்விதம் இரண்டாவது முறை போடப்பட்ட 'டெண்டேர்ட்' வோட்டுகளைத் தனியாகக் கட்டி முத்திரை வைத்து அனுப்புவார். ரிடர்னிங் ஆபீசர் எல்லா 'வோட்'டுக்களையும் எண்ணும்போது இந்த 'வோட்டு'களையும் சேர்த்து எண்ணமாட்டார். நீங்களே உண்மையான வாக்காளராக இருந்தாலும் உங்கள் "வோட்" ஏற்கனவே வேறு ஒருவரால் போடப்பட்டு விட்டதால் இந்நிலைமை ஏற்பட்டது. இவ்விதம் நடந்த காரணத்தினால், ஜயித்த அபேட்சகருடைய தேர்தலும் தேர்தல் கோர்ட்டால் ரத்துச் செய்யப்படலாம். அதைப் பற்றி வேறு இடத்தில் கவனிப்போம்.

—o—

'நீங்கள் உண்மை வாக்காளர் அல்ல'—என்றால்.

(Challenged votes) வேறு ஒன்றும் நேரலாம். நீங்கள் போலிங் ஸ்டேஷனுக்குப் போய் நீங்கள் யார் என்று போலிங் ஆபீசரிடம் சொல்லி 'பாலட் பேபர்' கேட்கும் போது, அத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களோ, அவர்கள் ஏஜண்டுகளோ அங்கே இருப்பார்கள். அவர்களில் யாராவது நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்ளாமல் போனால்—அதாவது நீங்கள் வாக்காளர் ஜாப்தாவில் கண்ட உண்மையான வாக்காளர் அல்ல என்றும், நீங்கள் ஏதோ ஆள் மாறாட்டம் செய்வதாகவும் அவர் சொன்னால் — அவர் சொல்லும் வெற்றுப் பேச்சை அவ்வதிகாரி கவனிக்கமாட்டார். ஆனால் அவர் செய்யும் ஆட்சேபனையுடன் ரூ. 10 அவ்வதிகாரியிடம் ரொக்க ஜாமீன் கட்டினால் அவருடைய ஆட்சேபனைகளைப் பதிவு செய்து கொள்வதுடன் உங்களையும் கொஞ்சம் சிரமப் படுத்துவார். அதாவது உங்களைப் பல கேள்விகள்

கேட்டு நீங்கள் யார், உண்மை வாக்காளர் தானா என்பதை அறிந்துகொள்ள முயற்சி செய்வார். உங்கள் பெயரை ஒரு தனி ஜாப்தாவில் குறித்துக்கொண்டு அதில் உங்கள் கையெழுத்தைப் போடும்படி சொல்லுவார். உங்களைத் தெரிந்தவர்களைக் கொண்டு அடையாளம் சொல்லும்படியும் அவர் உங்களைக் கேட்கலாம். நீங்கள் பதில் சொல்லாவிட்டாலும், உங்கள் அடையாளத்தை ருசுப்பிக்கா விட்டாலும், உங்களுக்குப் 'பாலட் பேபர்' கொடுக்க மாட்டார். அவர் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதிலும் சொல்லி, தேவையானால் உங்கள் அடையாளத்தையும் ருசுப்பித்தால் — அவர் உங்களிடம் 'பாலட் பேபர்' ஒன்றைக் கொடுப்பார். ஆனால் இவ்விவம் கொடுக்கு முன் 'ஆள் மாறாட்டம்' என்ற குற்றம் என்ன என்பதைப் பற்றியும் அதற்குத் தண்டனை என்ன என்பதைப் பற்றியும் சுருக்கமாக உங்களிடம் சொல்லி நாசூக்காக ஓர் எச்சரிக்கையும் செய்வார். நீங்கள் பாலட் பேபரை வாங்கிக்கொண்டு வோட் போடும் அறைக்குச் சென்று மற்ற எல்லோரையும் போல் ரகசியமாகவே உங்கள் 'வோட்'டைப் போட்டு வரலாம். உங்களைப் பற்றி ஆட்சேபனை செய்தவர் நல்ல எண்ணத்துடன் இந்த ஆட்சேபனை செய்ய வில்லை என்றும், காரணமில்லாமல் செய்யப் பட்டதென்றும் போலிங் அதிகாரிக்குத் தோன்றினால் உடனடியாக அவர் கட்டிய ரூபாய் 10ஐயும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்வார். அப்படி இல்லா விட்டால் அன்று சாயந்திரம் அப் பணத்தை அவரிடம் திருப்பிக் கொடுத்து விடுவார். இவ்விதம் ஆட்சேபிக்கப் படும் ஒவ்வொரு வாக்காளருக்கும் ரூ. 10 வீதம் கட்ட வேண்டு மென்பதுதான் விதி. இவ்விதம் ஆட்சேபனை செய்யப்பட்ட ஒவ்வொரு வாக்காளரைப் பற்றியும் அவ்வதிகாரி ஒரு தனிக் குறிப்பு எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் மனதில் குழப்பம் ஏற்பட்டால்

இவ்வளவு சங்கடங்களையும் தாண்டி 'பாலட் பேபர்' என்ற வாக்குச் சீட்டை உங்கள் கையில் வாங்கிக் கொண்டு "வோட்" போடுவதற்காக உள்ளே போகும் உங்களுடைய மனதில் திடீரென்று ஒரு குழப்பமோ, ஞானோதயமோ ஏற்பட்டு—"நான் இத்தேர்தலில் ஒருவருக்கும் என் 'வோட்டை'ப்போட மாட்டேன்"—என்று நீங்கள் தீர்மானித்தால் தயவு செய்து நீங்கள் வாங்கி வந்த 'பாலட் பேபர்' என்ற வாக்குச் சீட்டை அதை உங்களிடம் கொடுத்த அதிகாரியிடமே திருப்பிக் கொடுத்து விடுங்கள். அவர் அதை ரத்துச் செய்து தனியாகக் கட்டி வைத்துக் கொள்வார். வேண்டு மென்றோ, ஞாபக மறதியாகவோ இந்தப் பாலட் பேபரை வெளியே எடுத்து வந்து விடாதீர்கள். உங்களுக்கு மிகவும் அருவருப்பாக இருந்து எந்தப் பெட்டியிலும் உங்கள் வோட்டைப் போடாமல் அந்த அறைக்குள்ளேயே அதை வைத்துவிட்டு வெளியில் நீங்கள் வந்து விட்டாலும், அதை அவ்வதிகாரி பொறுக்கி, ரத்துச் செய்து தனிக்கட்டுடன் தான் வைத்துக் கொள்வார். எது செய்தாலும் பாலட் பேபரைப் போலிங் ஸ்டேஷனுக்கு வெளியே கொண்டு வருவது ஓர் குற்றமாகும் என்பதையும், இதற்கு ஒரு வருடம்வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப் படலா மென்பதையும் மறவாதீர்கள். நீங்கள் பாலட் பேபரை வெளியே கொண்டு போவதாகப் போலிங் அதிகாரிக்குச் சந்தேகம் தோன்றினால் கூட உடனே அரஸ்டு செய்து சோதனை செய்ய அவருக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் அதிகாரம் உண்டு.

திரும்பும்போதும் நடையே சிறந்தது.

இந்நாட்டு மன்னர் என்ற ஹோதாவில் நீங்கள் செய்யக்கூடிய இந்த ஒரே ஒரு பொறுப்பைச் செலுத்திவிட்டு, அதாவது உங்கள் 'வோட்டை' ஏதோ ஒரு பெட்டியில் போட்டு விட்டு, போலிங் ஸ்டேஷனை விட்டு நீங்கள் வெளியே வரும்போது அநேகமாக ஒருவரும் உங்களைக் கவனிக்கமாட்டார்கள். போட்டியிடும் அபேட்சகர்களுக்கும் அவர்களுடைய ஏஜண்டுகளுக்கும் இனி நீங்கள் ஒரு 'சுட்ட குழாய்.' நீங்கள் போலிங் ஸ்டேஷனைவிட்டு எப்படி உங்கள் வீடு போய்ச் சேரப் போகின்றீர்கள் என்று அவர்கள் கவலைப்படமாட்டார்கள். முன் நடந்த தேர்தல்களிலும் அது உங்கள் சொந்தக் கவலைதான். எப்படி இருந்தாலும், வேறு நெருங்கிய சிநேகத்தாலோ பழக்கத்தாலோ இப்பொழுது ஒரு அபேட்சகருடைய மோட்டாரிலோ, வண்டிகளிலோ நீங்கள் வீடு திரும்பும் போது கூட ஏறாதீர்கள். இதுவும் முன் விவரித்ததுபோல ஒரு ஊழலாகவும் குற்றமாகவும் கருதப்படும்.

தேர்தல் கணக்குகள்

தேர்தலில் போட்டியிட்ட ஒவ்வொரு அபேட்சகரும் தேர்தல் கணக்கை ரிடர்னிங் ஆபீசருக்கு அனுப்பவேண்டும். தேர்தலின் முடிவு பிரசுரம் செய்யப்பட்ட 45 நாட்களுக்குள் இக் கணக்கு அனுப்பப்பட வேண்டும். இக் கணக்குகளை யார் யார் கையெழுத்திட்டு அனுப்ப வேண்டும், எப்படி அனுப்ப வேண்டுமென்றும் பல நுட்பமான விதிகள் இருக்கின்றன. இவைகளை நன்கு கவனிக்க வேண்டியது தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்களுடைய கடமையாகும். இவ்விதிகளின்படி கணக்கு அனுப்பாதவர்கள் தேர்தலில் ஜயித்திருந்தும், பதவியை இழப்பார்கள். ஜயித்தாலும், தோற்றாலும் கணக்கு அனுப்பாதவர்கள் ஐந்து வருஷங்களுக்கு எந்தத் தேர்தலிலும் 'வோட்' போடும் உரிமையையும் அத்துடன் போட்டியிடும் உரிமையையும் இழக்க நேரிடும்.

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு அபேட்சகர் எவ்வளவு தொகைக்குமேல் தேர்தல் செலவு செய்யக்கூடாதென்று விதிகள் இருக்கின்றன. அதற்குமேல் செலவு செய்வது ஒரு பெரிய தேர்தல் ஊழலாகக் கருதப்படும். ஜயித்தவருடைய தேர்தலும் இக் காரணத்தால் ரத்துச் செய்யப்படலாம். நான்கு வருஷங்களுக்கு "வோட்" உரிமையும் போய்விடும்.

சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் எந்த அபேட்சகரும் கீழே கண்ட விபரப் படிக்குள்ள தொகைகளுக்குமேல் தேர்தல் செலவுகள் செய்யக்கூடாது. டில்லி பார்லிமெண்ட் சபைக்குப் போட்டியிடுபவர்—ஒரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தொகுதிகளில் ரூ. 25,000க்கு மேலும் இரண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தொகுதிகளில் ரூ. 35,000க்கு மேலும் செலவு செய்யக்கூடாது. சென்னை அசெம்பிளிக்குப் போட்டியிடும் அபேட்சகர்கள் ஒரு அங்கத்தினர் தொகுதிக்கு ரூ. 8000க்கு மேலும் இரண்டு அங்கத்தினர் தொகுதிக்கு ரூ. 12,000க்கு மேலும் செலவு செய்யக் கூடாது.

—o—

தேர்தல் வழக்குகள்

தேர்தலின் முடிவு சரி அல்ல என்று ஆட்சேபணை செய்ய, 'எலெக்ஷன் கமிஷன்' என்ற சபைக்குத்தான் மனுப்போடவேண்டும். வேறு கோர்ட்டுகளில் மனுப்போட முடியாது. அத்தேர்தலில் அபேட்சகராக இருந்தவரும் மனுப்போடலாம்; அத்தொகுதியின் 'வாக்காளர்' எவரும் கூட மனுப்போடலாம். தேர்தலில் யார் ஜயித்தார் என்று சர்க்கார் கெஜட்டில் பிரசுரமான பின்புதான் தேர்தல் மனுப்போடவேண்டும். அத்தேதியிலிருந்து ஜயித்த அபேட்சகர் தம்முடைய தேர்தல் கணக்குகளையும் உறுதிமொழிப் பத்திரத்தையும் இவ்விதிகளின்படி ரிடர்னிங் ஆபீசரிடம் அனுப்பிவிட்டாரென்று சர்க்கார் கெஜட்டில் பிரசுரமான தேதியிலிருந்து 14 நாட்கள் முடியும் வரை, எப்பொழுது வேண்டுமானாலும் தேர்தல் மனுக்கொடுக்க அவகாசம் உண்டு. ஒரே தொகுதியில் இரண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால் தேர்தல் முடிவு பிரசுரமான தேதிக்குப்பின், அவர்கள் தேர்தல் கணக்குகள் கொடுக்க வேண்டிய கெடு முடிந்து 60 நாட்களுக்குள் தேர்தல் மனுக் கொடுக்க வேண்டும். தேர்தல் மனுவை எலெக்ஷன் கமிஷன் காரியதரிசியிடம் நேரிலும் கொடுக்கலாம்; இதற்காக அதிகாரம் கொடுக்கப்பட்ட ஏஜெண்டுமூலமும் கொடுக்கலாம்; ரிஜிஸ்டர் தபால் மூலமும் அனுப்பலாம். சர்க்கார் கஜானா அல்லது ரிசர்வ் பாங்கியில் ரூ. 1000 செலவு தொகைக்காக ரொக்க ஜாமீன் கட்டி, அந்த ரசீதையும் மனுவுடன் அனுப்பவேண்டும். சட்டப்படி அனுப்பப்படாத மனுக்களை முதலெடுப்பிலேயே தள்ளிவிட எலெக்ஷன் கமிஷனுக்கு அதிகாரமுண்டு. அப்படித்தள்ளாவிட்டால் அம்மனுவை விசாரிக்க, 'எலெக்ஷன் டிரிபுனல்' என்ற 3 அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு சபை அக்கமிஷனால் நியமிக்கப்படும். டிரிபுனலின் தலைவர் ஒரு ஹைகோர்ட் ஜட்ஜ் அல்லது ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துள்ளவராக இருப்பார். மற்ற இருவரில் ஒருவர் அதே அந்தஸ்துள்ளவராகவும் மற்றவர் ஒரு வழக்கறிஞராகவும் இருப்பார். ஒரே தேர்தலைப்பற்றி எவ்வளவு மனுக்கள் போடப்பட்டிருந்தாலும் அதே டிரிபுனல்தான் விசாரிக்கும். எந்த இடத்தில் விசாரணை நடக்கவேண்டுமென்று எலெக்ஷன் கமிஷனே நிர்ணயம் செய்யும். தேர்தல் டிரிபுனலுக்கு விசாரணை செய்யும் விஷயமாய் கோர்ட்டுகளுக்குள்ள எல்லா அதிகாரங்களும் உண்டு. தேர்தல் மனுவைத் தள்ளவும்; ஜயித்தவருடைய தேர்தலை ரத்துச் செய்யவும்; மனுக்கொடுத்தவரோ வேறு

அபேட்சகரோ தான் அத்தேர்தலில் ஜயித்தவர் என்று நிர்ணயம் செய்யவும்; தேர்தல் முழுதுமே செல்லாதென்று சொல்லவும் தேர்தல் டிரிபுனலுக்கு அதிகாரமுண்டு. யார் யார் தேர்தல் ஊழல்கள் செய்தவர்கள் என்றும் நிர்ணயம் செய்ய டிரிபுனலுக்கு அதிகாரமுண்டு.

தேர்தல்கள் ரத்து செய்யப்படலாம்

ஒரு தேர்தலில், தாராளமாக லஞ்சம் வழங்கப்பட்டிருந்தாலும் சரி, நியாய மற்ற செல்வாக்கு உபயோகப்பட்டிருந்தாலும் சரி, ஒரு குறிப்பிட்ட ஜாதி அல்லது வகுப்பினரால் வாக்காளர்கள் கட்டாயப் படுத்தப்பட்டோ பயமுறுத்தப்பட்டோ 'வோட்' கொடுத்திருந்தாலும் சரி, அத்தேர்தலே செல்லாதென 'டிரிபுனல்' சொல்லலாம். அபேட்சகர்கள் நியமனம் தாக்கல் செய்யப்படும் போது ஒரு அபேட்சகர் சட்ட விரோதமாய் ஏற்றுக் கொள்ளப்பட்ட காரணத்தினாலோ, ஏற்றுக் கொள்ளப்படாத காரணத்தினாலோ, அத்தேர்தலின் போக்கே மாறிவிட்டதென்று ஏற்பட்டாலும் அத்தேர்தல் செல்லாதென 'டிரிபுனல்' தீர்ப்பளிக்கலாம். தேர்தலில் நடந்த கீழே விஸ்தரிக்கப்பட்டிருக்கும் "பெரிய தேர்தல் ஊழல்கள்", "சிறிய தேர்தல் ஊழல்கள்", "சட்ட விரோதமான நடத்தைகள்" இவைகளால்தான் ஒரு அபேட்சகர் ஜயித்தார் என்று ஏற்பட்டாலும் தேர்தல் ரத்தாகிவிடும். தேர்தலில் ஜெயித்த அபேட்சகரோ, அவருடைய ஏஜண்டோ, அல்லது அவருடன் ஒற்றுமையாக இருந்த ஒருவரோ கீழே "பெரிய தேர்தல் ஊழல்கள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் எதைச் செய்திருந்தாலும் அவருடைய தேர்தல் ரத்தாகும். மேலும் சட்டவிரோதமாக 'வோட்'களைப் பதிவு கொண்டதாலோ, மறுத்ததாலோ தேர்தல் சம்பந்தமான சட்டங்களையும் விதிகளையும் பின்பற்றாத காரணத்தினாலோ தவறாலோ, தேர்தலின் முடிவு பாதிக்கப்பட்டதென்று ஏற்பட்டாலும், அத்தேர்தல் ரத்துச் செய்யப்படும். தேர்தல் மனுப் போட்டவரையே 'ஜயித்த'வராகவும் தீர்மானிக்கவும் டிரிபுனலுக்கு அதிகாரம் உண்டு.

——o——

தேர்தல் ஊழல்களும் குற்றங்களும்

பெரிய ஊழல்கள் (Major Corrupt Practices) :—(1) லஞ்சம் கொடுப்பது (Bribery) — அதாவது ஒரு அபேட்சகரோ அவர் ஏஜண்டோ வேறு ஒரு அபேட்சகர் போட்டியிடுவதற்கோ, போட்டியிடாமலிருக்கவோ பணம் முதலிய வெகுமானம் கொடுப்பது; அல்லது வாக்காளருக்கு வோட் போடவோ, வோட் போடாமலிருக்கவோ வெகுமானம் கொடுப்பது. உண்மையாகச் சட்டப்படிக்கான செலவு செய்யப்பட்டு அதற்காகக் கணக்கில் எழுதப்பட்டுக் கொடுக்கப்படும் தொகைகள் இதில் சேராது. (2) மிதமிஞ்சிய நிர்பந்தம் (Undue Influence) — அதாவது ஒரு அபேட்சகரையோ, வாக்காளரையோ ஜாதிக்கட்டுப்பாடு செய்து விடுவதாகவோ வேறு விதமாகத் துன்புறுத்துவதாகவோ பயமுறுத்துவது; தெய்வ சாபம் ஏற்படுமென்று அவர் மனதில் பயத்தை உண்டாக்குவது முதலியவை, (3) ஒரு அபேட்சகரோ அவருடைய ஏஜண்டோ ஒரு வாக்காளருடைய வாக்குச்சீட்டை ஆள் மாருட்டம் செய்து வாங்கும்படி வேறு ஒருவரைத் தூண்டுவது. (4) 'போலிங்' ஸ்டேஷனில் வோட்டிங் நடக்கும்போது, அபேட்சகரோ, அவர் ஏஜண்டோ, வாக்குச்சீட்டுகளை அப்புறப்படுத்துவது. (5) ஒரு அபேட்சகரின் நடத்தையைப் பற்றியோ, சொந்த யோக்கியதாம்சங்களைப் பற்றியோ பொய்யான விஷயங்களை அவர் தேர்ந்தெடுக்கப்படுவதைக் கெடுக்கும் பொருட்டு வேறு ஒரு அபேட்சகரோ அவருடைய ஏஜண்டோ பிரசுரம் செய்வது. (6) வாக்காளர்களைப் போலிங் ஸ்டேஷனுக்கு ஏற்றிச் செல்லவும் திரும்பக்கொண்டு வரவும் ஒரு அபேட்சகரோ அவர் ஏஜண்டோ வாகனங்கள் அல்லது வண்டிகள் ஏற்பாடு செய்வது. (7) இச்சட்டத்திற்கும் விதிகளுக்கும் மாறாத ஒரு அபேட்சகர் அல்லது அவர் ஏஜண்டு செலவு செய்வது. (8) ஒரு அபேட்சகர் தாம் ஜயிப்பதற்காக, சர்க்கார் உத்தியோகஸ்தருடைய உதவியை நாடுவது-இவைகள் பெரிய ஊழல்களாகும்.

சிறிய ஊழல்கள் (Minor Corrupt Practices):—(1) அபேட்சகர் அல்லது அவர் ஏஜண்டு இவர்கள் உதவியில்லாமல் ஒருவர் மேற்கண்ட எட்டு வகை ஊழல்களில் ஏதாவது செய்வது. (2) ஒரு வாக்காளர் ஆள்மாருட்டம் செய்து வோட்செய்வது அல்லது ஒரு இடத்தில் வோட்செய்துவிட்டு மறுபடி வோட்பதிவு செய்ய வருவது. (3) அபேட்சகராக இருப்பவர் போட்டி இடவோ வாபஸ் வாங்கவோ லஞ்சம் வாங்கிக் கொள்வது. (4) தேர்தல்கணக்குப்

பொய்யாகக் கொடுப்பது. (5) ஒரு அபேட்சகர் தாம் ஜயிப்பதற்காக ஜாதி, இனம், பிரிவு, மதம் இவை பேரால் வாக்காளர்களை உத்சாகப் படுத்துவது; அல்லது மதச் சின்னங்களையோ, தேசியக் கொடி, தேசியச் சின்னம் போன்றவைகளை உபயோகப்படுத்துவது.

சட்ட விரோதமான நடத்தைகள்:—
(1) ஒரு அபேட்சகரைத் தவிர வெரும் அபேட்சகருடைய எழுத்து மூலமான அனுமதியின்றி ஒரு பொதுக் கூட்டத்திற்காகவோ, விளம்பரம் செய்யவோ, அறிக்கைகள் விடவோ செலவு செய்யச் செய்வது. (ஒரு ஸ்தாபனத்தால் செலவு செய்யப்படுவது இதில் சேராது.) (2) பொதுமக்களுக்கு மதுபானம் விற்பனை செய்யும் இடங்களில் வாக்காளர்கள் கூடுவதற்காக ஏற்பாடு செய்வது. (3) அச்சகம் பிரசுரிப்பவர் அவர்கள் பெயர் போடாத பிரசுரங்களையோ சுவரொட்டிகளையோ பிரசுரம் செய்வது.

குற்றங்கள்:—(1) ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு (வோட்) எடுக்கப்படும் தினத்தில் (Election Day) பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதும், அதற்குப் போவதும் குற்றமாகும். இதற்கு ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (2) ஒரு தொகுதியில் தேர்தல் நடைபெறும் என்ற அறிக்கை வெளியான பின்பும், தேர்தல் தினத்திற்கு முன்பும் நடக்கும் ராஜீய சம்பந்தமான கூட்டங்களை நடக்கவொட்டாமல் செய்ய எவரும் ஒழுங்கீனமாக நடப்பது குற்றமாகும் — இதற்கும் ரூபாய் 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். ஒரு 'மீட்டிங்' நடக்கும் போது அதன் தலைவரின் வேண்டுகோளின் பேரில் அவ்விதம் ஒழுங்கீனமாக நடப்பவரின் விலாசத்தை எந்தப் போலீஸ்காரரும் குறித்துக்கொள்ளலாம். விலாசம் கொடுக்க மறுப்பவரையும் பொய் விலாசம் கொடுப்பதாகச் சந்தேகப்படப் படுபவரையும் போலீசார் அரெஸ்டும் செய்யலாம். (3) தேர்தல் நடத்தும் உத்தியோகஸ்தர்கள் ஒரு வாக்காளர் 'வோட்' கொடுத்ததைப் பற்றியோ அதை எண்ணுவது பற்றியோ ரகசியமாக வைத்துக் கொள்ளாமலிருப்பது குற்றமாகும். இதற்கு மூன்று மாதம்வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (4) ரிடர்னிங் ஆபீசர் முதலிய எந்தத் தேர்தல் அதிகாரியும் ஒரு அபேட்சகர் ஜயிக்க வேண்டுமென்று அவருக்குச் சாதகமாக நடந்து கொள்வது குற்றமாகும். எந்தத் தேர்தல் அதிகாரியாவது போலீஸ் உத்தியோகஸ்தராவது ஒரு வாக்காளரை, 'வோட்' கொடுக்கும்படியோ, கொடுக்கவேண்டாமென்றோ வேறு ஒருவருக்கு வோட் சம்பந்தமாய்ச் சிபார்சு செய்யும்படியோ கேட்பதும் குற்றமாகும். இக் குற்றங்களுக்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (5) தேர்தல் தினத்தன்று தேர்தல் நடக்கும் 'போலிங் ஸ்டேஷனில்' அல்லது அதற்கு 100 கஜத்திற்குள் எவரும் வாக்காளர்களை ஒரு அபேட்சகருக்கு வோட் போடும்படி கேட்பதோ; வோட் போடாமலிருக்கும்படி கேட்பதோ தேர்தல் சம்பந்தமாய் விளம்பரம் செய்வதோ குற்றமாகும்; இதற்கு ரூ. 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (6) தேர்தல் தினத்தன்று தேர்தல் நடக்கும் இடத்திலோ, சமீபத்திலோ, எந்த ஒலிபெருக்கியையும் உபயோகிப்பது குற்றமாகும்; கூக்சலிடுவதும் குற்றமாகும்; இதற்கு 3 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (7) தேர்தல் அதிகாரியின் சட்டப்படிக்கான உத்தரவுப்படி நடக்காமலிருப்பதும் குற்றமாகும். இதற்கும் அதே தண்டனை உண்டு. (8) போலிங் ஸ்டேஷனுக்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல ஒரு அபேட்சகர் வண்டி வைப்பதும் குற்றமாகும். ரூ. 250 வரை அபராதம் விதிக்கப்படலாம். (9) தேர்தல் அதிகாரிகள் இச்சட்டப்படி நடக்காமலிருப்பதும் குற்றம்தான். ரூபாய் 500வரை அபராதம் விதிக்கப்படலாம். (10) தேர்தல் நடக்கும் இடத்தை விட்டு வாக்குச் சீட்டை வெளியே மோசடியாகக் கொண்டு போவது குற்றமாகும். இதற்கு ஒரு வருடம் சிறைத்தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (11) மோசடியாக நியமனச் சீட்டை அழிப்பது; நோட்டீசுகளை அழிப்பது; வாக்குச் சீட்டுகளை அழிப்பது; அதிகாரமற்ற 'பாலட் பேபர்'களைக் கொடுப்பது; பாலட் பெட்டியில் வேறு சாமான்களைப் போடுவது; பாலட் பெட்டியை உடைப்பது; இவை குற்றமாகும். இதைச் செய்பவர் தேர்தல் அதிகாரியாக இருந்தால் இரண்டு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். மற்றவர்களுக்கு 6 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

தேர்தல் அதிகாரிகள்

தேர்தல் கமிஷன் (Election Commission) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 324 ஆவது ஷரத்துப்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பிரதான கமிஷனரும் மற்றக் கமிஷனர்களும் இருப்பார்கள். டில்லி பார்லிமெண்ட் சபைகளுக்கும், ராஜ்ய சட்ட சபைகளுக்கும், தேர்தல்கள் நடத்தவேண்டிய பொறுப்பு இக்கமிஷனுடையது. தொகுதிகள் பிரிப்பது வாக்காளர் ஜாப்தா தயார் செய்வது, தேர்தல் நடத்துவது, தேர்தல் வழக்குகளை விசாரிக்கத் தேர்தல் டிரிபுனல்களை நியமிப்பது மற்ற தேர்தல் அதிகாரிகளை நியமிப்பது முதலிய பல அதிகாரங்கள் இக்கமிஷனுக்குத்தான் உண்டு. ஜனதிபதி அவர்களின் தேர்தலையும் உதவி ஜனதிபதி அவர்களின் தேர்தலையும் இக் கமிஷனே நடத்தும். இக் கமிஷனின் தலைவரை ஜனதிபதி அவர்கள் நியமித்தாலும் அவர் அவரை நீக்க முடியாது. ஒரு சுப்ரீம் கோர்ட் நீதிபதியை எப்படி விலக்க முடியுமோ அப்படித்தான் இக்கமிஷன் தலைவரையும் நீக்கலாம்.

பிரதேச கமிஷனர்கள். (Regional Commissioners) பொதுத் தேர்தல்களில் தேர்தல் கமிஷனுக்கு உதவிசெய்யத் தேவையான பிரதேச கமிஷனர்களை நியமிக்க ஜனதிபதி அவர்களுக்கு அதிகாரமுண்டு.

தேர்தல் பதிவு அதிகாரிகள். (Electoral Registration Officers). ஒவ்வொரு தொகுதிக்கும் வாக்காளர் ஜாப்தா (Electoral Roll) தயார் செய்ய தேர்தல் கமிஷனல் நியமிக்கப்படும் அதிகாரி. இவர் ஒரு சர்க்கார் அல்லது ஸ்தலஸ்தாபன அதிகாரியாக இருப்பார். சென்னை ராஜ்யத்தில் அந்தந்த இடங்களின் ரிவன்யூ டிவிஷனல் ஆபீசர்களே ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீசர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (18—9—1951 சென்னைச் சர்க்கார் கெஜட் — பாகம்-II பக்கம்-1309) வாக்காளர் ஜாப்தாவில் ஒரு வாக்காளருடைய விவரங்கள் தவறுதலாக இருந்தால் இந்த அதிகாரிக்கு மனுக்கொடுத்து திருத்திக் கொள்ளலாம்.

தேர்தல் ரிடர்னிங் ஆபீசர் (Returning Officer.) ஒவ்வொரு தொகுதிக்கும் தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பு 'ரிடர்னிங் ஆபீசர்' என்ற அதிகாரியுடையது. சர்க்கார் அதிகாரியாக இருப்பவரைத்தான் 'ரிடர்னிங் ஆபீசராக' எலெக்ஷன் கமிஷன் நியமிக்க வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் உதவி ரிடர்னிங் ஆபீசர்களும் நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு போலிங் ஸ்டேஷன் என்ற தேர்தல் சாவடிக்கும் ஒரு தலைமை உத்தியோகஸ்தரையும், போலிங் ஆபீசர்களையும் இந்த ரிடர்னிங் ஆபீசர் தான் நியமிப்பார். தேர்தலில் அபேட்சகர்களாக நிற்பவர்கள் ரிடர்னிங் ஆபீசரிடம் தான் குறிப்பிட்ட காலத்தில் தம் நியமனத்தாளை (Nomination Paper) தாகல் செய்ய வேண்டும். இவரிடம்தான் டிபாசிட்டும் கட்ட வேண்டும். ரிடர்னிங் ஆபீசர்தான் நியமனத் தாள்களை பரிசீலனை செய்து, சரியாக இருப்பவைகளை ஒப்புக் கொள்ள வேண்டியவர். வாபஸ் வாங்கிக்கொள்ளும் அபேட்சகர்களும் இவரிடம் தான் குறிப்பிட்ட காலத்திற்குள் வாபஸ் நோட்டீசைத் தாக்கல் செய்ய வேண்டும். கடைசியில் 'வோட்'டுகளை எண்ணி, தேர்தலின் முடிவை தெரிவிக்க வேண்டியதும் இந்த ரிடர்னிங் ஆபீசர்தான்.

சென்னை ராஜ்யத்திலுள்ள தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரிடர்னிங் ஆபீசர் நியமிக்கப்பட்டிருக்கிறார். (23-10-1951 சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 1472, 1485)

போலிங் தலைமை அதிகாரி. (Presiding Officer.) ஒவ்வொரு போலிங் ஸ்டேஷன் என்ற தேர்தல் சாவடிக்கும் ஒரு 'பிரசைடிங் ஆபீசர்' நியமிக்கப்படுவோர். இவர் ரிடர்னிங் ஆபீசரால் நியமிக்கப்படுவார். தேர்தல் தினத்தன்று அந்தப் போலிங் ஸ்டேஷனில் தேர்தலை நடத்த வேண்டியது இவருடைய பொறுப்பு. இவருக்குக் கீழே போலிங் ஆபீசர்களும், உதவி போலிங் ஆபீசர்களும் நியமிக்கப்படலாம்.

போலிங் ஆபீசர். (Polling Officer) இவர் போலிங் ஸ்டேஷனில் தலைமை அதிகாரிக்கு உதவி செய்வார்.

தேர்தல் டிரிபுனல். (Election Tribunal) ஒவ்வொரு தேர்தல் வழக்கையும் விசாரிக்க மூன்று அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு டிரிபுனல் என்ற ஒரு விசேஷ கோர்ட் தேர்தல் கமிஷனல் நியமிக்கப்படும். இந்த டிரிபுனல்தான் தேர்தல் வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரமுள்ளவை.

தேர்தல் சின்னங்கள்

தேர்தல் நடத்துவதில் இப்பொழுது ஒரு புது முறை பின்பற்றப்படும். அதாவது தேர்தல் விதி 5 இன்படி 'தேர்தல் சின்னங்கள்' எவை என்று தேர்தல் கமிஷனால் ஒரு ஜாப்தா வெளியிடப்பட்டிருக்கிறது. தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும் தமக்கு எந்தச் சின்னம் வேண்டுமென்று நியமனப்பத்திரம் தாகல் செய்யும் போதே இதையும் குறிப்பிட்டு விடவேண்டும். ஒவ்வொரு அபேட்சகருக்கும் ரிடர்னிங் ஆபீசரால் ஒரு சின்னம் ஒதுக்கப்படும். ஆனால் இத்தேர்தலில் போட்டியிடும் கக்ஷிகள் ஒவ்வொன்றுக்கும் இப்பக்கத்தில் கண்டபடி ஒரு சின்னம் எலெக்ஷன் கமிஷனாலேயே கொடுக்கப்பட்டுவிட்டது. அந்தக் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள் எந்த எந்தத் தொகுதிகளில் போட்டியிட்டாலும் சரி அவர்களுக்கு அதே சின்னம்தான் கொடுக்கப்படும். தனிப்பட்ட ஹோதாவில் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகர்கள் இவ்விதம் ஏற்கனவே கக்ஷிகளுக்காக ஒதுக்கப்பட்ட சின்னங்களைத் தவிர மற்றச் சின்னங்களிலிருந்து தமக்குப் பிடித்த சின்னங்களை மேற்கண்டபடி குறிப்பிடலாம்.

சின்னம்- அகில இந்திய கக்ஷிகளுக்கு



1. இரு எருதுகள் நுகத்தடியுடன் — இந்திய தேசிய காங்கிரஸ் கக்ஷி

2. மரம் — சோஷலிஸ்டு கக்ஷி

3. நிற்கும் சிங்கம் — அகில இந்திய பார்வேட் பிளாக் (மார்க்ஸிஸ்டு குரூப்)

4. மனிதரின் கை — அகில இந்திய பார்வேட் பிளாக் (ரூகர் குரூப்)

5. குதிரையுப் சவாரி செய்பவரும் — அகில பாரதீய இந்து மகாசபை

6. குடிசை — கிஸான் மஸ்தூர் பிரஜா கக்ஷி



7. உதயசூரியன் — அகில பாரதீய ராம ராஜ்யபரிஷத்

8. யானை — அகில இந்திய ஷெட்யூல் வகுப்பு சம்மேளனம்.

9. தானியக் கதிரும் அரிவாளும் — இந்திய கம்யூனிஸ்ட் கக்ஷி



10. மண் வெட்டியும் குடுப்பும். — புரட்சி சோஷலிஸ்ட் கக்ஷி.

11. எரியும் தீவட்டி — இந்தியப் புரட்சி கம்யூனிஸ்ட் கக்ஷி.

12. நட்சத்திரம் இந்திய போல்ஷவிக் கக்ஷி

13. தானியத்தை புடைக்கும் விவசாயி — கிருஷிகர் லோக் கக்ஷி

14. தீபம்- அகில பாரதீய ஜன சங்கம்

சென்னைக் கக்ஷிகளுக்கு

15. தராசு — ஜஸ்டிஸ் கக்ஷி
16. ஏணி — முஸ்லீம் லீக் கக்ஷி
17. சைகிள் — காமன் வெல்த் கக்ஷி
18. ரயில்வே இன்ஜின் — அகில இந்திய 'ரிபப்ளிகன்' கக்ஷி
19. கோழி- தமிழ் நாடு உழைப்பாளர் கக்ஷி
20. வண்டி- அகில இந்திய விவசாய யூனியன்

சுயேச்சை அபேட்சகர்களுக்கு



21. வில்லும் அம்பும்

22. படகு



23. புஷ்பம்

24. ஜாடி

25. ஒட்டகம்

26. கிளையும் இரு இலைகளும்.

27. குடை 28. குருவி 29. மோட்டார்கார் 30. நாற்காலி 31. பூட்டும் சாவியும் 32. கிணறு.

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

தேர்தலில், ஒருவருக்குப் பதிலாக வேறு ஒருவரைத் தமக்கு "வோட்" போடும்படி ஆள் மாருட்டம் செய்யத் தூண்டிய சட்டசபை மெம்பர்.

[ஆதாரம்:—118 இந்தியன் கேஸஸ் 577.]

தேர்தல்கள் சம்பந்தமான தனிச் சட்டங்களைத் தவிர, இந்தியன் பீனல்கோடு என்ற குற்றங்களைக் குறித்த பொதுச் சட்டத்திலும் சில முக்கியஷரத்துக்கள் இருக்கின்றன. அச்சட்டத்தில் 1920-ஆம் வருடத்தில் 9-A என்ற ஒரு புதிய அத்தியாயமே சேர்க்கப்பட்டது. எந்தத் தேர்தல்களிலும் சில செய்கைகள் குற்றங்களாக்கப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தில் கண்ட விதிகள் பஞ்சாயத்து எலெக்ஷனானாலும் சரி முனிசிபல் அல்லது ஜில்லாபோர்டு எலெக்ஷனானாலும் சரி, அல்லது பார்லிமெண்ட், சட்டசபை எலெக்ஷனானாலும் சரி எவ்வித மான தேர்தல்களுக்கும் பொருந்தும். முக்கியமாக லஞ்சம் கொடுப்பது, பயமுறுத்துவது, ஆள்மாருட்டம் செய்வது இவைகள் இதன்படி தேர்தல் குற்றங்களாகும்.

பிரஸ்தாப வழக்கு ஆள் மாருட்டம் செய்த குற்றத்தைப் பற்றியது. பதன்சிங் என்பவர் ஒரு சட்டசபை மெம்பர். சின்ன ஜமீன்தாரும் ஆவார். ஜில்லா போர்டு மெம்பராகவும் வர ஆசைப்பட்டு அத் தேர்தலில் போட்டியிட்டார். போட்டி அவருக்கும் இன்னும் ஒருவருக்கும் தான். பதன்சிங்கே ஜயித்தார். ஜயித்த இவருக்குத் தோற்றவரை விட மிக அதிக "வோட்டு"கள் கிடைத்தன. ஆனால் தோற்றவர் இவருடைய தேர்தலை ரத்துச் செய்ய வேண்டுமென்று தேர்தல் மனுக் கொடுத்தார். தேர்தல் தினத்தன்று இவர் தம்முடைய சகோதரர் என்று வேறு ஒருவரை ஆள்மாருட்டம் செய்யும்படிசெய்து அவரைத் தமக்கு "வோட்" போடும்படி செய்தார் என்று இவர்மீது எலெக்ஷன் மனுப்போடப்பட்டது. இது ருசுவானதால் இவருடைய ஜில்லா போர்டு தேர்தல் ரத்துச் செய்யப்பட்டது. இவர் இன்னும் இரண்டு வருடங்களுக்கு அப்பதவிக்கு வரக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டது.

இத்துடன் நிற்கவில்லை. தேர்தலில் ஆள்மாருட்டம் செய்யத் தூண்டிய குற்றத்திற்காக இவர் மீது கிரிமினல் வழக்கும் சர்க்காரால் தொடரப்பட்டது. இவருடைய சகோதரர் தேர்தல் தினத்திற்கு இரண்டு மாதங்கள் முன்பே இறந்துவிட்டதாகவும், அவர் எங்கும் நடமாடமுடியாத ஒரு குஷ்டரோகியாகவே இருந்தார் என்றும் ருசுவிடப்பட்டது. "ஆள்மாருட்டம்" செய்த நபரைத்தான் தம் சகோதரர் என்று பதன்சிங் அடையாளம் சொன்னதாகவும் ருசுப்பிக்கப்பட்டது. மாஜிஸ்ட்ரேட் பதன்சிங்தான் இந்த ஆள் மாருட்டத்தை ஏற்பாடு செய்தார் என்று அபிப்பிராயப்பட்டு இவருக்கு ரூ. 500 அப

187214

ராதம் விதித்தார். இத் தீர்ப்பு, செஷன்ஜெட்ஜால் உறுதி செய்யப்பட்டது. இதன் பேரில் சர்க்கார் அப்பீல் செய்தனர். அதாவது வெறும் அபராதம் விதித்தது மட்டில் போதாதென்றும் சிறைத் தண்டனை விதிக்கப்படவேண்டுமென்றும் அலகாபாத் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். இந்த அப்பீலை விசாரித்த இரண்டு உயர்நீதிபதிகளில் ஒருவர் விதிக்கப்பட்ட தண்டனையே போதும் என்றும், மற்ற நீதிபதி அவர்கள் இது போதாது, சிறைத் தண்டனையும் விதிக்கப்படவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டதால் மூன்றுவது நீதிபதியாக பிரதம நீதிபதி அவர்களுடைய அபிப்பிராயம்கோரப்பட்டது. பிரதம நீதிபதி அவர்கள் அபராதம் விதித்த தண்டனையை ரத்துச்செய்து பதன்சிங்குக்கு, மூன்று மாதம் சிறைத் தண்டனை விதித்தார். குற்றம் செய்தவர் ஜமீன்தாராக இருப்பதால் எவ்வளவு அபராதம் விதிக்கப்பட்டாலும் அலட்சியமாக அதைக் கொடுத்து விடுவார் என்றும்; இவர் மற்றவர்களுக்கெல்லாம் சட்டம் செய்யக்கூடிய ஒரு சட்டசபை மெம்பராக இருந்து இக்குற்றம் செய்திருப்பது பலமாக நிந்திக்கப்படவேண்டிய ஒரு பொது விஷயமாகும் என்றும் பிரதம நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, பதன்சிங்குக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

* * * *

‘பக்கிரிமுகமதி’ன் மகன் முகமதுதீனுக்குப் பதிலாக ‘அப்துல்லா’வின் மகன் முகமதுதீன் ‘வோட்’ செய்தார். மாட்டிக்கொண்டு தண்டனை அடைந்தார்.

[ஆதாரம்:—117 இந்தியன் கேஸஸ்-883.]

வாக்காளர் ஜாப்தாவில் ‘முகமதுதீன்’ என்று ஒரு பெயர் இருந்தது. அதற்கு எதிரே தகப்பனார் பெயர் ‘பக்கிரிமுகமது’ என்று இருந்தது. ‘முகமதுதீன்’ என்ற ஒருவர் தேர்தல் நடக்கும் போலிங் ஸ்டேஷனுக்குப் போய், தம் பெயரைச் சொல்லி, ‘பாலட் பேபர்’ என்ற வோட்டுச்சீட்டு ஒன்று தமக்குக் கொடுக்கும்படி போலிங் ஆபீசரைக் கேட்டார். ‘உம்முடைய தகப்பனார் பெயர் என்ன’ என்று அவ்வதிகாரி இரண்டு மூன்று தடவை கேட்டதற்கும் அவர் தம் தகப்பனார் பெயர் ‘பக்கிரி முகமது’ என்றே சொன்னார். இது பொய். ஏனென்றால் அவருடைய தகப்பனார் பெயர் ‘அப்துல்லா’. இந்தியன் பீனல்கோடு செக்ஷன் 171 D-யின்படி இவர் ஆள் மாறாட்டம் செய்து ஓட் போட்டார் என்று இவர்மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டது. அவர் தாம் தான் உண்மையான வாக்காளர் என்றும் பக்கிரி முகமது என்பவரின் மகன் முகமதுதீன் என்று அங்கே வேறு ஒருவரும் இல்லை என்றும் வாதாடினார். இவருடைய கக்ஷி கேட்கப்படவில்லை. வாக்காளர் ஜாப்தாவில் இருக்கும் முகமதுதீன் என்பவர்தான் ‘வோட்’ செய்த முகமதுதீன் என்று ருசுவாகவில்லை. முகமதுதீன் ஆள் மாறாட்டம் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டார். இத் தண்டனையை லாகூர் ஹைகோர்ட்டார் உறுதி செய்தனர்.

மதருஸ் ஹிந்து மத, தர்ம, ஸ்தாபன பரிபாலனச் சட்டம்

(1951-வது வருஷத்து 19-வது சட்டம்)

யாவத்து ஷரத்துக்களும் பூர்ணமாகவும் தெளிவாகவும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஷரத்துக்களுக்கு விசேஷ குறிப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. நடவடிக்கைகள் சம்பந்தமான விதிகளும் நமூனுக்களும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆசிரியர்: R. கிருஷ்ணமாச்சாரி B. A., B. L.,

விலை Rs. 1—12—0. ரூ. 2 M. O. செய்தால் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பப்படும்.

R. ரெங்கனாதன்,

16, பாபுநாயக்கன் தெரு, கும்பகோணம்.

-என்ற விலாசத்திற்கு எழுதவும்.

பொதுமக்களால் போற்றப்பட்டுவரும்

குடந்தை

லேபர் & கோ.,

தனி சுவை வாய்ந்த சோடா கலர் பானங்களை அருந்துங்கள்.

நிர்வாகி,

குடந்தை லேபர் & கோ.,

கும்பகோணம்.

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய, சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

104. **கேள்வி:** (நாராயணசாமி செட்டியார்- பிரஹும்பி) ஓர் இந்தியப் பிரஜை 'ஓட்டு' சீட்டு உள்ளவர், தம் "வோட்டை" யாருக்குமே போடாவிட்டால் சட்டப்படி குற்றமாகுமா?

பதில்: ஒரு வாக்காளர் கட்டாயமாக "வோட்டு"ப் போடவேண்டுமென்ற சட்டம் இல்லை. ஆனால் தேர்தல் தினத்தன்று தேர்தல் சாவடிக்குப் போய், போலிங் ஆபீசரிடம் 'வோட்டு'ச் சீட்டை வாங்கி விட்டவர்கள்— ஒன்று அதை ஏதாவது ஒரு பெட்டிக்குள் போட வேண்டும்; அல்லது அதை திரும்ப, போலிங் அதிகாரியிடமே கொடுத்தவிட வேண்டும். 'பாலட் பேப்பர்' என்ற வோட்டுச் சீட்டை எந்தப் பெட்டியிலும் போடாமலிருப்பது குற்றமல்ல; ஆனால் போடாத சீட்டைப் போலிங் அதிகாரியிடம் திரும்பக் கொடுத்துவிடாமல் வெளியே எடுத்துச் செல்வதுதான் குற்றமாகும்.

105. **கேள்வி:** (அப்துல் மஜீது—திருவிடச்சேரி.) இரண்டு கண்ணும் தெரியாத வாக்காளர் எப்படி இரகசிய முறையில் வாக்களிக்கமுடியும்? அபேட்சகர்களின் சின்னங்களைப் பார்த்து வித்தியாசம் தெரிந்துகொள்ள முடியாத அறைகுறைப் பார்வையாளர்களும் எப்படி இரகசிய வாக்களிக்க முடியும்?

பதில்: இவ்வித வாக்காளர்கள் தங்களுடைய இரகசியத்தை ஒரே ஒரு ஆசாமியிடம் தெரிவித்தால் போதும். அதாவது கண் தெரியாத காரணத்தினாலோ வேறு தேக அசௌக்கியத்தாலோ, தேர்தல் சின்னங்களைப் பார்க்கவோ, பெட்டியில் வாக்குச் சீட்டைப் போடவே முடியாதவர்கள் 'வோட்' போடும் அறைக்குள் நுழையும்போது, அங்கிருக்கும் போலிங் தலைமை அதிகாரியும் அவருடன் கூடவே உள்ளே வருவார். அவ்வாக்காளர் யாருக்கு வோட்டுப்போட அபிப்பிராயப்படுகிறார் என்பதைக் கூடியமட்டில் இரகசியமாகக் கேட்டு, வாக்காளரின் அபிப்பிராயப்படி அவருடைய வாக்குச் சீட்டை அந்த அதிகாரியே பெட்டிக்குள் போடுவார். இவ்விதம் செய்த வாக்காளர்களின் பெயர் மட்டில் ஒரு ஜாப்தாவில் குறித்துக் கொள்வார். அதிலும் அந்த வாக்காளர் யாருக்கு 'வோட்' போட்டார் என்ற இரகசியத்தை எழுதமாட்டார். எழுதவும் கூடாது. சட்ட விரோதமாக இந்த இரகசியத்தை வேறு ஒருவருக்கு அந்த அதிகாரி வெளியிடுவது ஒரு குற்றமாகும். இதற்கு 3 மாதம் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். (ஜனப் பிரதிநிதிச் சட்ட விதி 26. 1951 ஜனப் பிரதிநிதிச் சட்டம்—செக்ஷன் - 128)

106. **கேள்வி:** (K. மயில்சாமி — கோழிக்குட்டை.) வரப்போகும் பொதுத் தேர்தலில் பார்லிமெண்ட் அல்லது சென்னை அசெம்பிளிக்கோ அல்லது அடுத்துவரும் கிராமப் பஞ்சாயத்தில் ஒரு அங்கத்தினராகவோ நிற்க, சர்க்கார் அல்லது பஞ்சாயத்தின் குத்தகைதாரர்களுக்கும், 'கண்ட்டிராக்டர்'களுக்கும் உரிமை உண்டா?

பதில்: மத்திய சர்க்காருடன் சரக்கு சப்ளை செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டவர்களும் அல்லது ஒரு வேலையைச் செய்து கொடுக்க 'காண்ட்ராக்ட்' செய்து கொண்டவர்களும் பார்லிமெண்ட் சபைக்கு நிற்க முடியாது; சென்னைச் சர்க்காருடன் அவ்வித ஒப்பந்தம்

அல்லது 'காண்ட்ராக்ட்' செய்துகொண்டவர்கள் சென்னை அசெம்பிளிக்கோ மேல் சபைக்கோ நிற்க முடியாது. (1951—ஜனப் பிரதிநிதிச் சட்டம்—செக்ஷன் 7 (d)); ஒரு கிராமப் பஞ்சாயத்துடன் மேற்கண்ட ஒப்பந்தம் அல்லது காண்ட்ராக்ட் செய்துகொண்டவர்களும் குத்தகை முதலிய வேறு ஒப்பந்தம் செய்து கொண்டவர்களும் அந்தக் கிராமப் பஞ்சாயத்தின் அங்கத்தினராக வரமுடியாது. (கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் —செக்ஷன் 16.)

107. கேள்வி: (கந்தசாமி - விக்கிரமங்கலம்) ஒரு போலிங் ஆபீசில் இரண்டு அபேட்சகர்களுக்குப் பெட்டிகள் வைத்திருக்கிறார்கள். வாக்காளர் சீட்டை வாங்கிக்கொண்டு போய், இரு அபேட்சகர்களுக்கும் நான் 'வோட்டு'ச் செய்ய விரும்பவில்லை என்று போலிங் ஆபீசரிடம் 'வோட்டு'ச் சீட்டை கொடுத்தால் குற்றமாகுமா?

பதில்: இது குற்றமாகாது. ஒரு பெட்டியிலும் போடாத 'பாலட்பேப்பர்' என்ற வாக்குச் சீட்டைப் போலிங் ஸ்டேஷன் தலைமை ஆபீசரிடமே திருப்பிக் கொடுத்துவிடத்தான் வேண்டும். அவர் அதை வாங்கி "ரத்துச் செய்யப்பட்டது—திருப்பிக் கொடுக்கப்பட்டது" என்று அதில் எழுதிக்கொண்டு இவ்விதமான சீட்டுக்களைத் தனியாக வைத்துக் கொள்வார். (ஜனப் பிரதிநிதிச் சட்ட விதி 31.) வாக்காளர் உபயோகிக்காத வாக்குச் சீட்டை மேலே கண்டபடி திருப்பிக் கொடுக்காமல், மோசடியாய், வெளியே கொண்டுபோனாலும், கொண்டுபோக முயற்சி செய்தாலும், அது ஒரு குற்றமாகும். இதற்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இவ்விதம் மோசடியாக ஒரு வாக்காளர் தம் வாக்குச் சீட்டை வெளியே கொண்டுபோவதாகத் தலைமை ஆபீசருக்குச் சந்தேகம் தோன்றினாலும் அவரை சோதனை செய்யவும் அரெஸ்டு செய்யவும் அதிகாரமுண்டு. (ஜனப் பிரதிநிதிச் சட்டம் (1951) செக்ஷன் 135.)

சென்னை-600 008

—

விலை உயர்ந்ததும் வெகு விரைவில் அபார குணம் தரக்கூடியதுமான 16 விதம் மருந்துகள் அடங்கிய **அவஸர கால மருந்து பெட்டி** தயாராகிவிட்டது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் அத்யாவசிய தேவையுள்ளது. இப்பெட்டி கைவசமிருந்தால் மிகவும் ஆபத்தான காலங்களிலும் பல உயிர்களை காப்பாற்ற முடியும். வைத்ய செலவும் குறைவதுடன் எடுத்ததற் கெல்லாம் டாக்டரைத் தேடுவதையும் தவிர்க்கலாம்.

விபரங்களுக்கு:—

லலிதா பார்மஸி,

49, மூர்த்தி செட்டித்தெரு,

கும்பகோணம்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.